# புதிய ஜனநாயகம்

மே 2014
ரூ.10.00



## எல்லா கேசையும் ஊத்தி மூடணும்...

## செய்வீர்களா...?

# “மறுகாலனியாக்கத்துக்கான போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! உழைக்கும் மக்கள் அதிகாரத்துக்கான புதிய ஜனநாயக அரசமைப்பைக் கட்டியெழுப்புவோம்! கொலைகார மோடி தலைமையிலான பார்ப்பன பாசிச பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலை விரட்டியடிப்போம்!”

## - புரட்சிகர அமைப்புகளின் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார இயக்கம்

நாடாளுமன்றப் போலி ஜனநாயகத் தேர்தல் நாடகத்தை அம்பலப்படுத்தியும், ‘‘நாடு மீண்டும் காலனியாவதைத் தடுப்போம்! இந்துவெறி பாசிச அபாயத்தை முறியடிப்போம்!’’ என்ற புரட்சிகர அரசியலை முன்வைத்தும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் விரிவாகவும் வீச்சாகவும் போர்க்குணத்தோடும் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டன.


திருச்சியில்...

ஓட்டுப்போடுவது ஜனநாயகக் கடமையாக கருதிக் கொண்டிருக்கும் மக்களிடம் தனியார்மய - தாராளமயக் கொள்கையால் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டு கொடுமைகளும் சீரழிவுகளும் பெருகியுள்ளதையும், எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆண்ட போதும் இந்தக் கொள்கைகளைப் போட்டி போட்டுக் கொண்டு அமல்படுத்தி வந்துள்ளதையும் விளக்கி, ஓட்டுப் போடுவது ஜனநாயகக் கடமையல்ல, மடமை என்பதைத் தோழர்கள் உணர்த்தினர்.

ஓட்டுப் போடாமல் வேறு என்ன செய்வது என்ற கேள்விக்கு, மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் திருப்பி அழைக்கவும், தவறிழைத்தால் தண்டிக்கவும், சட்டமியற்றவும் அதைச் செயல்படுத்தவும் அதிகாரம் கொண்ட மக்கள் போராட்டக் கமிட்டிகளைக் கட்டியமைத்து, நமக்கான அரசாங்கத்தை நாமே உருவாக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தனர். அதற்கான முதல்படிதான் தேர்தல் புறக்கணிப்பு; அடுத்த அடி இந்த மக்கள் விரோத அதிகாரத்தைத் தகர்க்கும் போராட்டங்கள்; இத்தகைய மக்கள் போராட்டக் கமிட்டிகளே உண்மையான ஒரே மாற்று என்பதை உணர்த்தி பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண் குமாரை இப்புரட்சிகர அமைப்புகளின் முன்னணியாளர்கள் நேரில் சந்தித்து தேர்தலைப் புறக்கணித்துப் பிரச்சாரம் செய்யும் உரிமையை அவரிடம் விளக்கியதைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கும் அவர் தகவல் தெரிவித்த பின்னரும்கூட, அந்த உரிமையை வெட்டிச் சிதைப்பதிலேயே அதிகார வர்க்கமும் போலீசும் மும்முரமாக ஈடுபட்டன. தஞ்சையில் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்துக்கு முற்றாக அனுமதி மறுத்து அடாவடி செய்தது போலீசும் அதிகார வர்க்கமும்.

திருச்சி பகுதியில் அரசியல் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில் அவமதிப்பு செய்வதாகக் குற்றம் சாட்டி தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரக் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, நீண்ட போராட்டத்துக்குப் பின்னரே 7 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 18.4.2014 அன்று சென்னை - மணலி பகுதியில் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டி ஒட்டியதையடுத்து, பொய்வழக்கு சோடித்து இரு பு.ஜ.தொ.மு. தோழர்களைக் கைது செய்து சிறையிலடைத்தது போலீசு. இதேபோல கடலூரிலும் பு.மா.இ.மு. முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஓட்டுப் பொறுக்கிகளின் அச்சுறுத்தல், போலீசின் அடாவடிகள் - என அனைத்தையும் எதிர்கொண்டு உழைக்கும் மக்களின் உற்சாகமான ஆதரவோடு நடந்த இப்பிரச்சார இயக்கம், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புரட்சிப் புயலாக வீசியது.


வி.வி.மு. தோழர்களின் துணையுடன், மீதேன் திட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தை தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கமாக முன்னெடுத்துச் செல்லும் திருநகரி கிராம மக்கள்.

தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட பு.ஜ.தொ.மு., வி.வி.மு. அமைப்பினர் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் துண்டுப் பிரசுரத்துடன் குடியிருப்புகள், கிராமப்புறங்கள், ஆலைவாயில்களில் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இவ்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# தேவை: மாற்று அதிகாரத்துக்கான மக்கள் எழுச்சி!

தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பாகவே, தமிழக மக்கள் மீது வேறொரு முடிவு இடியாய் இறங்கியுள்ளது. மின்கட்டணம் மீண்டும் உயர்த்தப்படவிருக்கிறது. ஜெ ஆட்சிக்கு வந்தவுடனே மின் கட்டணத்தை இருமடங்கு உயர்த்திவிட்டு, இனி கட்டண உயர்வும் மின்வெட்டும் இருக்காது என்று அறிவித்தார். மின்வெட்டு தீராதது மட்டுமல்ல, கட்டணமும் மீண்டும் உயர்த்தப்படுகிறது. மூன்றே ஆண்டுகளில் தமிழக மின்வாரியத்தின் நட்டம் ரூ.45 ஆயிரம் கோடியிலிருந்து 75 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. தமிழக அரசு தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒரு யூனிட்டுக்கு ரூ.12 வரை விலை கொடுத்து மின்சாரம் வாங்கியிருப்பது தான் நட்டத்துக்கு காரணம். பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் மின்சாரத்தை வாங்குவதற்குப் பதிலாகத் தனியார் முதலாளி களிடம் அதிக விலைக்கு வாங்கியிருப்பதில் கோடிக்கணக்கில் இலஞ்சம் கைமாறியிருக்கும் என்ற போதிலும், இந்த முடிவே இல்லாத கட்டண உயர்வுக்குக் காரணம் மின்சாரம் தனியார்மயம்தான்.

மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமல்ல, நிலக்கரிச் சுரங்கங்களும் எண்ணெய் எரிவாயு வயல்களும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் விற்கப்படுவதால், நிலக்கரி மற்றும் எரிவாயுவின் விலையும் இனி கார்ப்பரேட் முதலாளிகளால்தான் தீர்மானிக்கப்படும். அடுத்ததாக முகேஷ் அம்பானியின் கொள்ளை இலாபத்துக்காக எரிவாயு விலை பன்மடங்கு உயர்த்தப்படவிருக்கிறது. அதன் காரணமாக சமையல் எரிவாயுவின் விலை மட்டுமின்றி, மின் கட்டணமும் பன்மடங்கு உயரும். எல்லாப் பொருட்களின் விலையும் அதிகரிக்கும். காப்பீட்டுத் துறை, சுரங் கங்கள், இரயில்வே உள்ளிட்ட பொதுத்துறைகள் தனியார்மயம், விவசாய மானிய வெட்டு, தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச ஊதியம் உள்ளிட்ட உரிமைகள் ரத்து போன்ற அடுத்தடுத்த தாக்குதல்கள் காத்திருக்கின்றன.

மின் கட்டண உயர்வு என்பது பானைச் சோறுக்கு ஒரு சோறு. கல்வி, மருத்துவம், பால், குடிநீர், பேருந்துக் கட்டண உயர்வு என அடுத்தடுத்த தாக்குதல்கள் காத்திருக்கின்றன. இப்படித் தனியார்மயக் கொள்ளைக்கு மென் மேலும் வழியமைத்துக் கொடுக்கும் விதத்தில் ஆட்சி நடத்துவதைத்தான் வளர்ச்சி என்றும் சிறந்த அரசாளுமை என்றும் முதலாளித்துவ ஊடகங்கள் சித்தரிக்கின்றன. டில்லியில் ஒரு கூட்டணி ஆட்சி ஏற்பட்டு அதன் விளைவாக, மேற்கூறிய தனியார்மய நடவடிக்கைகள் தள்ளிப்போடப் பட்டால், இந்தியாவிலிருந்து அந்நிய முதலீட்டாளர்கள் வெளியேற நேரிடும் என்றும், அதன் விளைவாக இந்தியப் பொருளாதாரம் திடீரென்று கவிழும் நிலை ஏற்படுமென்றும் ''மூடி'' என்ற ஏகாதிபத்திய தர நிர்ணய நிறுவனம் சென்ற மாதம் வெளிப்படையாகவே எச்சரிக்கை செய்திருக்கிறது.

இதற்கேற்ப காங்கிரசும் பா.ஜ.க.வும் 'வளர்ச்சி' என்ற பெயரால் கார்ப் பரேட் முதலாளிகளின் கொள்ளைக்கு தமது தேர்தல் அறிக்கைகளின் வழியாக உத்திரவாதம் அளித்துள்ள நிலையில், யார் தலைமையில் எத்தகைய கூட்டணி ஆட்சி அமைந்தாலும், அது கார்ப்பரேட் கொள்ளையர்களின் நோக்கத்தைச் செயல்படுத்துவதாகவே இருக்கும் என்பது நிச்சயமாகி விட்டது.

மறுகாலனியாக்க கொள்கைகள் அமலாகத் தொடங்கிய நாள் முதல் நடந்து வருவது இதுதான். நாடாளுமன்றம், சட்டமன்றம், நிர்வாக எந்திரம்,

தொடர்ச்சி 9-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 29 இதழ்: 7
மே 2014

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## நீதிமன்றம், தேர்தல் ஆணையம்:

# ஜெயாவின் குற்றக் கூட்டாளிகள்!

**சட்டம், நீதி–நெறிமுறைகளுக்குச் சவால்விடும் வகையில் ஆட்டம் போட்டு வரும் ஜெயாவிற்கு நீதிமன்றம் உள்ளிட்ட அதிகார அமைப்புகள் பக்கவாத்தியம் வாசிக்கின்றன.**

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. எந்தக் கட்சியுடனும் கூட்டணி சேராமல், அம்மாவின் செல்வாக்கை மட்டுமே நம்பி தனித்துப் போட்டியிடுவதாக அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவும் அவரது கைத்தடிகளும் கூறிவருகிறார்கள். வெளிப் பார்வைக்கு உண்மையைப் போலத் தெரியும் இந்தக் காட்சி ஒரு பொய்த் தோற்றம். தமிழக மக்களின் கண்ணுக்குப் புலப்படாத, ஒரு திரைமறைவான கூட்டணியை உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றம், தேர்தல் கமிசன் ஆகியவற்றோடு அமைத்துக்கொண்டு, ஜெயா இந்த நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கிறார் என்பதே உண்மை. ஜெயாவிற்கு எதிராக பெங்களூருவில் நடந்துவரும் சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் சென்னைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்துவரும் வருமான வரி வழக்கு ஆகிய இரண்டிலும் சமீபத்தில் உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்புகள்; தேர்தல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. தொடுத்த வழக்குகளைத் தேர்தல் கமிசனும், உயர் நீதிமன்ற நீதிபதிகளும் அணுகிய முறை; அ.தி.மு.க.வின் பணப் பட்டுவாடா எதிர்க்கட்சிகளின் குறுக்கீடு இல்லாமல் நடைபெற வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு தேர்தலுக்கு முன்பு தமிழகம் தழுவிய அளவில் தேர்தல் கமிசனால் போடப்பட்ட 144 தடையுத்தரவு - இவற்றையெல்லாம் நியாயமாகப் பரிசீலிக்கும் யாரும் மேற்கண்ட முடிவுக்குத் தான் வர முடியும்.

1991-96-களில் தமிழகத்தின் முதல்வராக இருந்து ஜெயா நடத்திய ஊழல், கொள்ளை தொடர்பாக ஜெயா-சசி கும்பல் மீது நாற்பதுக்கும் மேற்பட்ட கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டன. சட்டத்திற்கு அப்பாற்பட்ட வழிவகைகளைக் கையாண்டும், தனது பார்ப்பன சாதி செல்வாக்கு மற்றும் அரசியல், பண பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் பெரும்பாலான வழக்குகளில் இருந்து தண்டனையின்றித் தப்பித்துக் கொண்டார், ஜெயா. பிளஸண்ட் ஸ்டே விடுதி வழக்கு மற்றும் டான்சி வழக்குகளில் கீழமை நீதிமன்றங்களால் ஜெயா தண்டிக்கப்பட்டாலும், சென்னை உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் அசாதாரணமான முறையில் அவரைக் குற்றமற்றவராக அறிவித்தன. எனினும், சொத்துக்குவிப்பு வழக்கு, வருமான வரி வழக்கு உள்ளிட்ட மூன்று, நான்கு வழக்குகள் ஊத்தி மூடிவிட வாய்ப்பின்றி, அவரது நிம்மதியை மட்டுமல்ல, அவரது அரசியல் நப்பாசைகளையும் கெடுத்து வருகின்றன. ஒரு புறம், நீதிபதிகள், சட்ட வல்லுநர்களையே திணறடிக்கும் வகையில் மனுவுக்கு மேல் மனு போட்டும், வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கியும் இந்த வழக்குகளை ஜெயா கும்பல் இழுத்தடித்து வருகிறது என்றால், இன்னொரு புறம் நீதிமன்றங்கள் இவ்வழக்கு விசாரணையின் இக்கட்டான தருணங்களில் ஜெயாவைக் காப்பாற்றும் ரட்சகனாக நடந்துகொண்டு, இந்த வழக்குகள் நியாயமாகவும் விரைவாகவும் விசாரிக்கப்படுவதைத் தடுத்து வருகின்றன.

சொத்துக்குவிப்பு வழக்கில் பவானி சிங் தான் அரசு வழக்குரைஞராக நீடிக்க வேண்டும்; நீதிபதி பாலகிருஷ்ணாதான் இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கோரி கடந்த ஆண்டு ஜெயா-சசி கும்பல் தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஜெயாவிற்குச் சாதகமாக அளித்த தீர்ப்பே குற்றவாளி ஜெயாவுக்கும் நீதியரசர்களுக்கும் இடையே இருந்துவரும் தொடர்பை அம்பலப்படுத்தியது. இன்னார்தான் தனக்கு எதிராக வாதாட வேண்டும்; இன்னார்தான் தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் எனக் குற்றம் சாட்டப்பட்டவர் கேட்ட அதிசயமும்; உச்ச நீதிமன்ற நீதிபதிகள்

ஜெயா - சசி கும்பலுக்கு விலை போகாமல் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை நடத்திவரும் பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா.



சௌகானும் பாப்டேயும் அந்தக் கோரிக்கையை ஏற்று தீர்ப்பளித்த விநோதமும் இந்த வழக்கில் நடந்தது கண்டு சட்ட வல்லுநர்களே விக்கித்துப் போனார்கள்.

நீதிபதி பாலகிருஷ்ணா பதவி ஓய்வுபெற்ற பிறகும் கூட, அவரே இந்த வழக்கின் நீதிபதியாகத் தொடர வேண்டும் என்று ஜெயா கும்பல் மட்டுமல்ல, உச்ச நீதிமன்றமும் அவ்வாறே விரும்பியது. ஆனால், இந்த ஏற்பாடுக்குச் சம்மதிக்காமல் பாலகிருஷ்ணா கழண்டு கொண்ட பிறகு, புதிய நீதிபதியாக மைக்கேல் டி குன்ஹா கடந்த ஆண்டு இறுதியில் பதவியேற்றார். பாலகிருஷ்ணாவைப் போல புதிய நீதிபதி குன்ஹாவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பதை ஜெயா-சசி கும்பல் புரிந்துகொண்டவுடனேயே, அக்கும்பல் வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் கிரிமினல் வேலைகளை மீண்டும் தொடங்கியது.

மைக்கேல் டி குன்ஹா வழக்கின் இறுதிகட்ட விசாரணையைத் தொடங்க உத்தரவிட்டவுடனேயே, ''தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட, அதேசமயம் இவ்வழக்கிற்குத் தொடர்பில்லாத பொருட்களைத் தம்மிடம் ஒப்படைக்க''க் கோரி ஜெயா கும்பல் கடந்த ஜனவரி மாத இறுதியில் மனு போட்டது. ''இம்மனுவிற்குப் பதில் அளிக்க தனக்கு இரண்டு வாரம் அவகாசம் அளிக்க வேண்டும்'' என வாய்தா கேட்டு குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்ள முயன்றார், அரசு வழக்குரைஞர் பவானி சிங். ''இது குற்றவியல் நீதிமன்றமா, அல்லது ஒத்திவைப்பு மன்றமா'' எனஅப்பொழுதே கேள்வி எழுப்பிய நீதிபதி குன்ஹா, பவானி சிங்கின் கோரிக்கையை ஏற்க மறுத்து ஜனவரி 31-க்குள் பதில் அளிக்குமாறு அவருக்கு உத்தரவிட்டார்.

மினி பஸ்களில் உள்ள இரட்டை இலையை மறைக்கக் கோரி தி.மு.க. தொடுத்த வழக்கில் ஜெயாவின் மனது புண்பட்டுவிடாதபடி தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்ற தற்காலிகத் தலைமை நீதிபதி சதீஷ் கே.அக்னிஹோத்ரி.



இந்த மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின், இறுதிகட்ட விசாரணை பிப்.3 அன்று தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அரசு வழக்குரைஞர் பவானி சிங்கோ அன்று இறுதிகட்ட வாதத்தைத் தொடங்குவதற்குப் பதிலாக, ''ஜெயாவின் ஆலோசகராக இருந்த வி. பாஸ்கரன் நீதிமன்ற அனுமதியோடு வாங்கிப் போன 55 இலட்சரூபாய் மதிப்பு கொண்ட வெள்ளிப் பொருட்களைச் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்த பிறகுதான் மூல வழக்கைத் தொடரவேண்டும்'' எனக் கோரும் மனுவை அளித்தார். இந்த மனு அடிப்படையிலேயே பொய்யும் புரட்டுத்தனமும் நிறைந்தது; மூல வழக்கு விசாரணையை முடக்க வேண்டும் என்ற கிரிமினல் நோக்கில் போடப்பட்டது என்பது விசாரணையின்போது அம்பலமானது.



ஜெயாவின் ஏஜெண்டாகச் செயல்படும் உச்ச நீதிமன்ற நீதிபதி பி.எஸ்.சௌஹான்.

**''சொத்துக் குவிப்பு வழக்கில் ஆரம்பம் முதல் தற்போது வரை பல நாடகங்கள் அரங்கேறி வருகிறது. வழக்கைத் தாமதம் செய்ய பல வழிகளில் முயற்சி நடக்கிறது. அனைத்து மட்டத்திலும் நாடகமே அரங்கேறி வருவதாக'' கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சத்தியநாராயணா குறிப்பிட்டுள்ளார். சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையை முடக்கிப் போடுவதற்கு நடந்துவரும் சதிகள், மோசடிகளை விளங்கிக் கொள்வதற்கு இதற்கு மேலும் வார்த்தைகள் தேவையில்லை.**

பாஸ்கரன் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே புற்றுநோய் முற்றி இறந்து போய்விட்டதை இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு உதவுவதற்காக அனுமதிக்கப்பட்ட தி.மு.க. வழக்குரைஞர் நீதிமன்றத்தில் போட்டுடைத்தார். இறந்துபோன பாஸ்கரனின் மகன் சாட்சி கூண்டிலேறி, ''தனது தந்தை வாங்கிப் போன வெள்ளிப் பொருட்கள் முதல் குற்றவாளியின் - ஜெயாவின் போயசு பங்களாவில் இருப்பதை'' அம்பலப்படுத்தினார்.

தனக்கு ஆலோசகராக இருந்த இதே பாஸ்கரன் மீது கஞ்சா கேஸ் போட்டு உள்ளே தள்ளிய இழிபுகழ் பெற்றது ஜெயா கும்பல். பாஸ்கரன் இறந்துபோவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்புதான் இந்தப் பொய் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். அப்படிபட்ட நபர் இறந்துபோனது தெரியாது என்பது போல நடித்தும், அந்த வெள்ளிப் பொருட்கள் ஜெயாவின் வீட்டிலே இருப்பதை மறைத்தும் இப்படியொரு மனுவை ஜெயா கும்பலும் அரசு வழக்குரைஞரும் கூட்டுச் சேர்ந்து போட்டிருப்பது பஞ்சமா பாதகங்களுக்கும் அஞ்சாத கிரிமினல்தனம் அல்லவா! இந்த உண்மைகள் அம்பலமான பிறகும்



சொத்துக் குவிப்பு தொடர்புடைய வழக்கொன்றில் தனது வரம்பை மீறி ஜெயாவின் பினாமி நிறுவனங்களை விடுவித்துத் தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன்.

கூட, பாஸ்கரன் இறந்து போனதைத் தான் இன்னமும் நம்பவில்லை எனச் சாதித்தார், ஜெயாவின் கைக்கூலியான அரசு வழக்குரைஞர்.

இம்மோசடியான மனுவைத் தள்ளுபடி செய்ததோடு, மார்ச் 7 அன்று அரசு வழக்குரைஞர் தனது இறுதி வாதத்தைத் தொடங்க வேண்டுமென உத்தரவிட்டார், நீதிபதி குன்ஹா. ஆனால், பவானி சிங்கோ அன்று நீதிமன்றத்திற்கு வராமல் மட்டம் போட்டு நீதிமன்ற உத்தரவைக் கேலிக்கூத்தாக்கினார். இறுதி வாதத்திற்கான தேதி மார்ச் 10-க்குத் தள்ளிவைக்கப்பட்ட அன்றும் பவானி சிங் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்து வழக்கு விசாரணையைச் சீர்குலைத்தார். பிறகு மார்ச் 14 அன்று நீதிமன்றத்திற்கு வந்த பவானி சிங் இறுதி வாதத்தைத் தொடங்காமல், தனக்கு உடல்நிலை சரியில்லை எனக் கூறி பத்து நாட்களுக்கு வழக்கை ஒத்திவைக்கக் கோரினார். இது தொடர்பாக அவர் அளித்த மருத்துவச் சான்றிதழோ, மருத்துவரின் கையொப்பம்கூட இல்லாமல் மோசடியான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. நடப்பது நாடகம் என்பதைப் புரிந்துகொண்ட நீதிபதி குன்ஹா இறுதி வாதத்தைத் தொடங்க வேண்டுமென உத்தரவிட, பவானி சிங் மறுக்க, இதன் காரணமாக அரசு வழக்குரைஞர் தனது ஒருநாள் சம்பளத்தை (ரூ.65,000-) அபராதமாகச் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டு, விசாரணையும் மார்ச் 15-க்கு ஒத்திவைக்கப்பட்டது. பவானி சிங் அன்றும் எவ்விதக் காரணமும் கூறாமல் நீதிமன்றத்திற்கு வாரமல் போனதால், அவருக்கு மறுபடியும் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த அபராதத்தை எதிர்த்து பவானி சிங் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் வேறுவழியின்றி அரசு வழக்குரைஞர் பவானி சிங் இறுதிகட்ட வாதத்தைத் தொடங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இந்த இறுதி வாதத்தின் பொழுது, 1991-96 காலகட்டத்தில் ஜெயா-சசி கும்பல் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி எப்படியெல்லாம் தமிழகமெங்கும் சொத்துக்களை வாங்கி குவித்தார்கள் என இவ்வழக்கின் சாட்சியங்கள் அளித்த வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் படித்துக் காட்டினார், பவானி சிங். 1991-இல் வெறும் இரண்டு கோடியே சொச்சம் சொத்துக்களைக் கொண்டிருந்த ஜெயாவின் சொத்து மதிப்பு, அவர் 1996-இல் முதலமைச்சர் பதவியிலிருந்து தமிழக மக்களால் துரத்தப்பட்ட சமயத்தில் 66 கோடியாக வளர்ந்து, இன்று அச்சொத்துகளின் மதிப்பு 5,000 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பது இதன் மூலம் அம்பலமானது. பவானி சிங் சிறப்பு நீதிமன்றத்தில் படித்துக் காட்டிய இந்த மலைக்கவைக்கும் சொத்துப் பட்டியலை தினகரன், முரசொலி உள்ளிட்ட தி.மு.க. ஆதரவு நாளேடுகள் மட்டுமே வெளியிட்டன. நடுநிலை நாளேடுகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இந்து, தினமணி உள்ளிட்டு பல நாளேடுகள் இந்த விவரங்களை வெளியிடாமல் ஜெயாவிற்கு விசுவாசமாக நடந்து கொண்டன.

•••

பவானி சிங் சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயா-சசி கும்பல் கொள்ளையடித்து வைத்திருந்த சொத்து விவரங்களின் ஆதாரங்களைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்த அதே நேரத்தில், குற்றவாளிகள் தரப்பு இதனை முடக்கும் புதிய சதித் திட்டத்தை சென்னையில் அரங்கேற்றினர். சொத்துக்குவிப்பு வழக்கு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடந்துவந்த போது, அந்நீதிமன்றம் ஜெயா-சசி கும்பலின் பினாமிகளால் நடத்தப்பட்டு வந்த 22 நிறுவனங்களின் சொத்துக்களை முடக்கித் தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து ஜெயா-சசி கும்பல் அப்பொழுதே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது. சொத்துக்குவிப்பு வழக்கு பத்தாண்டுகளுக்கு முன்பே பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பிறகு இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் சென்னை உயர் நீதி மன்றத்திற்குக் கிடையாது. ஆனால், சென்னை உயர் நீதிமன்றமோ நீண்டகாலமாக கிடப்பில் கிடந்த இந்த

ஜெயா கலந்துகொண்ட கள்ளக்குறிச்சி பொதுக்கூட்டத்தில், அவரின் உருவம் பொறித்த முகமூடியைக் கடமை தவறாது விநியோகிக்கும் ''ஜெயா போலீசு.''



வழக்கைத்தூசிதட்டி எடுத்து, அதனைவிசாரித்துத்தீர்ப்பு வழங்கும் பொறுப்பை நீதிபதி அருணா ஜெகதீசனிடம் ஒப்படைத்தது. அந்நீதிபதியும், ''இந்த 22 சொத்துக்களும் மூல வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குச் சொந்தமானதல்ல'' எனத் தீர்ப்பெழுதி, அந்த நிறுவனங்களின் சொத்துக்களை விடுவித்துத் தனது ''பொறுப்பை''க் கனகச்சிதமாக முடித்தார். மேலும், இந்த 22 நிறுவனங்களுக்கும் சொத்துக்குவிப்பு வழக்கிற்கும் தொடர்பிருக்கிறதா என்பதை மீண்டும் விசாரிக்குமாறு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்திற்கு அறிவுரையும் வழங்கினார்.

சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பான மனுக்கள் எங்கு விசாரிக்கப்பட்டாலும், அதில் பவானி சிங் மட்டுமே அரசு வழக்குரைஞராக ஆஜராக முடியும். ஆனால், சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கிலோ பவானி சிங்கிற்குப் பதிலாக அ.தி.மு.க.வைச் சேர்ந்தவரும் தமிழக அரசு வழக்குரைஞருமான இன்பதுரை அரசு வழக்குரைஞராக ஆஜராகி, ஜெயாவிற்குச்சாதகமான தீர்ப்பை வாங்கி கொடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, இப்படியொரு வழக்கு சென்னையில் நடப்பதை குற்றவாளிகள் தரப்பு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்திற்குத் தெரியாமல் மூடி மறைத்து, நீதிபதியை ஏமாற்றியுள்ளனர். இந்தப் பித்தலாட்டத்தனங்கள் அனைத்திற்கும் சென்னை உயர் நீதி மன்றமும் உடந்தையாக நடந்து கொண்டுள்ளது.

பவானி சிங் மார்ச் 21 அன்று தனது இறுதிகட்ட வாதத்தை எடுத்துவைக்கத் தொடங்கிய மறுநாளே சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து இப்படியொரு வரம்பு மீறிய தீர்ப்பு வெளிவந்திருப்பதைத் தற்செயலானதாகப் பார்க்க முடியாது. இந்த வழக்கு தொடர்புடைய சாட்சிகளுள் பெரும்பாலோர் வெளிநாட்டில் இருப்பது தெரிந்திருந்தும் இந்த வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு சென்னை உயர்நீதி மன்றம் அறிவுறுத்தியிருப்பது மூல வழக்கு விசாரணையைக் காலவரையின்றித் தள்ளிப் போடும் உள்நோக்கம் கொண்டதாகும்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் இத்தீர்ப்பை நீதிபதி குன்ஹா ஒதுக்கித் தள்ளியதோடு, மூல வழக்கு விசாரணையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிறுத்த முடியாது எனக் குற்றவாளிகளின் பொட்டில் அடித்தாற் போலச் சொல்லிவிட்ட பிறகு, ஜெயா-சசி-பவானி சிங் கும்பல் மூலவழக்கு விசாரணையை முடக்கும் அடுத்த சதியை டெல்லியில் அரங்கேற்றினர்.

•••

அரசு வழக்குரைஞர் பவானி சிங் தன் மீது விதிக்கப்பட்ட அபராதத்தை ரத்து செய்ய மறுத்த கர்நாடகா உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இதோடு தனது உடல் நிலையையும் காரணம் காட்டி வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படியும் முறையிட்டார். சிறப்பு நீதிமன்றத்தால் பவானி சிங்கிற்கு விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை 1,30,000 ரூபாய்தான். ஆனால், இதனை ரத்து செய்யக் கோரும் மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்காடுவதற்கு, நீதிமன்றக் கட்டணம், வழக்குரைஞர் கட்டணம் எல்லாம் சேர்த்து பன்னிரெண்டு இலட்ச ரூபாய்க்கும் அதிகமாகச் செலவழித்திருக்கிறார், அவர். 1,30,000 ரூபாயைக் காப்பாற்றிக் கொள்ள பன்னிரெண்டு இலட்ச ரூபாய் செலவு செய்வதால் பவானி சிங்கிற்கு இலாபமில்லைதான்; ஆனால், அவரை ஆட்டுவிக்கும் ஜெயா-சசிக்கு பம்பர் பரிசே கிடைத்தது.

பவானி சிங்கின் மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.எஸ்.சௌஹான், செல்லமேஸ்வர் அமர்வு, வழக்கின் இந்தப் பின்னணியெல்லாம், குறிப்பாக கடந்த இரண்டு மாதங்களாக பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வரும் கூட்டுக் களவாணித்தனத்தையெல்லாம் தெரிந்துதான், தமிழகத்தில் தேர்தல் முடியும்வரை விசாரணை நடைபெறக்கூடாது என்ற உள்நோக்கத்துடன்தான், விசாரணைக்கு மூன்று வார காலம் - ஏப்.28 வரை தடை விதித்து, ஜெயாவின் நெஞ்சில் பால் வார்த்திருக்கிறார்கள். ஏப்ரல் 28-க்குப் பிறகாவது வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுமா என்பதற்கும் எந்த உத்தர வாதத்தையும் தீர்ப்பில் கூறாமல், ''அதற்குப் பிறகும் உங்களால் (பவானி சிங்) முடியாவிட்டால், கர்நாடகா உயர் நீதிமன்றத்திடம் முறையிடுங்கள்; வேறு வழக்குரைஞருக்கு வழிவிடுங்கள்'' என்று அறிவுரை வழங்கி, ஜெயா-சசி கும்பல் வழக்கை மேலும் இழுத்தடிப்பதற்கான வாய்ப்பையும் திறந்துவிட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு 7.4.2014 அன்று வெளியானது. அதற்கடுத்த இரண்டாவது நாளில்-9.4.2014 அன்று, சொத்துக்குவிப்பு வழக்கோடு தொடர்புடைய லெக்ஸ் பிராபர்டீஸ் நிறு

அ.தி.மு.க.வின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ் ஓட்டுக்குப் பணம் கொடுப்பதற்காகப் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதைச் சோதனைச் செய்யச் சென்ற தேர்தல் அதிகாரிகள், தி.மு.க.வினரை உடன் அழைத்துச் செல்ல மறுத்ததைக் கண்டித்து நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா தலைமையில் நடந்த சாலை மறியல்.



வனத்தின் மேல்முறையீட்டு மனுவொன்றை விசாரித்து வரும் கர்நாடகா உயர்நீதிமன்ற நீதிபதி சத்ய நாராயணா, ''சொத்துக் குவிப்பு வழக்கில் ஆரம்பம் முதல் தற்போது வரை பல நாடகங்கள் அரங்கேறி வருகிறது. வழக்கைத் தாமதம் செய்ய பல வழிகளில் முயற்சி நடக்கிறது. அனைத்து மட்டத்திலும் நாடகமே அரங்கேறி வருவதாக'' விசாரணையின்போது குறிப்பிட்டார். சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை முடக்கிப் போடுவதற்கு நடந்து வரும் சதிகள், மோசடிகளை விளங்கிக் கொள்வதற்கு இதற்கு மேலும் வார்த்தைகள் தேவையில்லை.

ஊழல், கிரிமினல் வழக்குகளில் சிக்கும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தொடர்பான வழக்குகளை ஓராண்டுக்குள் முடித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்று மார்ச் 10 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், இத்தீர்ப்பு வந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே முக்கியமானதொரு ஊழல் வழக்கில், பதினேழு ஆண்டுகளாகக் குற்றவாளிகளால் இழுத்தடிக்கப்படும் வழக்கில், குற்றவாளிகளுக்கு ஆதரவாக விசாரணைக்குத் தடைவிதித்து நீதிபதிகள் தீர்ப்பெழுதுகிறார்கள் என்றால், ஊழலுக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் சண்டமாருதமெல்லாம் வெற்று வார்த்தைகள்தான்; ஆளுக்குத் தக்கபடி தீர்ப்புகளை எழுதுவார்கள், சட்டங்களை வளைப்பார்கள் என்பது தானே உண்மை. நீதியின் செங்கோல் ஜெயாவிற்கு ஏற்றபடி வளையும் என்பதற்கு இன்னொரு உதாரணம் வேண்டுமென்றால், ஜெயா-சசிகலாவிற்கு எதிராக நடந்து வரும் வருமான வரி வழக்கில், அவ்விசாரணையை மேலும் மூன்று மாதங்கள் நீட்டித்து உச்சநீதிமன்ற நீதிபதி கே.எஸ். ராதாகிருஷ்ணன் அமர்வு அளித்திருக்கும் தீர்ப்பைக் குறிப்பிடலாம்.

•••

**சொ**த்துக்குவிப்பு வழக்கைப் போலவே வருமான வரி வழக்கும் கிட்டதட்ட 16, 17 ஆண்டு கால பாரம்பரியம் கொண்டது. ஜெயா-சசி கும்பல், இவ்வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல்முறையீடு கடந்த எட்டு ஆண்டுகளாக ஊறுகாய் பானைக்குள் உறங்கிக் கொண்டிருந்தது. இவ்வழக்கை நான்கு மாதங்களுக்கு முன்பாகத்தூசிதட்டி எடுத்து விசாரிக்கத் தொடங்கிய கே.எஸ். ராதாகிருஷ்ணன் அமர்வு, தோழிகளின் மனுவைத் தள்ளுபடி செய்து, வழக்கை நான்கு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என கடந்த மார்ச் இறுதியில் உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து இவ்வழக்கை விசாரித்து வரும் சென்னைப் பெருநகரப் பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ஆர்.தெட்சிணாமூர்த்தி, ஜெயா - சசிகலா இருவரையும் ஏப்.3 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டவுடனேயே, வழக்கை மேலும் நான்கு மாதங்களுக்கு நீட்டிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார், ஜெயா. இந்த மனுவைப் பழைய மனு போல கிடப்பில் போடாமல் அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாகவே, ஏப்.10 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கே.எஸ். இராதாகிருஷ்ணன் அமர்வு கால அவகாசத்தை நீட்டிக்க முடியாது எனக் கருத்து தெரிவித்தது. ஆனால், அடுத்த ஐந்து நாட்களில் என்ன மாயம் நடந்ததோ, மனுதாரரின் தேர்தல் பணிகளைக் கருத்தில் கொண்டு மூன்று மாத கால அவகாசம் அளிப்பதாக ஏப்.15 அன்று தீர்ப்பு எழுதியது.

ஏப்ரல் 22 அன்றோடு தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிந்துவிடும் நிலையில் இவ்வழக்கை மேலும் மூன்று மாத காலம் நீட்டித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய அவசியமே கிடையாது. எனினும், தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசு அமைப்பது தொடர்பான பேரங்களிலும் ஜெயா கலந்துகொள்வதற்கு வசதியாகவே இந்த கால அவகாசத்தை அளித்துள்ளனர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள். புதிய அரசில் ஜெயா பங்கு பெறும் நிலை ஏற்பட்டால், இந்த வழக்குகளின் நிலை அதோகதிதான்!

வருமான வரி வழக்கில் இன்னொரு சுவாரசியமான திருப்பமும் உண்டு. உச்ச நீதிமன்றம் விசாரணையை மேலும் மூன்று மாதங்கள் நீட்டித்து தீர்ப்பளித்த அதே நாள் காலையில் இவ்வழக்கை விசாரித்து வரும் ஆர்.தெட்சிணாமூர்த்தியை இடம் மாற்றம் செய்து, அவரது இடத்தில் நீதிபதி மாலதியை அமர்த்தி அறிவிக்கை வெளியிட்டது சென்னை உயர் நீதிமன்றம். எனினும், அன்று மாலையே நீதிபதி தெட்சிணாமூர்த்தியின் இடம் மாற்றல் உத்தரவு ரத்து செய்யப்பட்டு, அவரை மீண்டும் பழைய இடத்திலேயே பணியமர்த்தும் உத்தரவு வெளியிடப்பட்டது. ஜெயாவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டதற்காக தெட்சிணாமூர்த்தி மாற்றப்பட்டார் என்று கொண்டால், சுடுகாட்டு ஊழலை விசாரித்துத் தமது முன்னாள் கூட்டாளி செல்வகணபதிக்குத் தண்

**ஏப்ரல் 22 அன்றோடு தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிந்துவிடும் நிலையில் வருமானவரி வழக்கை மேலும் மூன்று மாத காலம் நீட்டித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய அவசியமே கிடையாது. எனினும், தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசு அமைப்பது தொடர்பான பேரங்களிலும் ஜெயா கலந்துகொள்வதற்கு வசதியாகவே இவ்வழக்கில் மேலும் மூன்று மாத கால அவகாசத்தை அளித்துள்ளனர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.**

டனைஅளித்த நீதிபதி மாலதியை வருமானவரி வழக்கை விசாரிக்க நியமனம் செய்தது தோழிகளுக்கு உறுத்தலை ஏற்படுத்தியிருக்கக் கூடும் எனக் கருதுவதற்கு இடமுண்டு.

கட்டுப்படாமல், அனைத்திற்கும் மேலான எதேச்சதிகாரியாக அவர் நடந்து வருகிறார்.

அவரது நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுவதாக இருந்தபோதும் மக்களின் அறியாமை, அதிகார வர்க்கம், ஓட்டுக்கட்சிகளின் பிழைப்புவாதம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி வருகிறார். அவர் பதவியில் இல்லாதபொழுதுகூட சோ, சுப்பிரமணிய சுவாமி, சரத் பவார், தேவே கௌடா உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள்; விஜய் மல்லையா, சாராய உடையார் குடும்பம், ஸ்பிக் முத்தையா உள்ளிட்ட தரகு முதலாளித்துவக் கும்பல்; இந்து, தினமணி உள்ளிட்ட பத்திரிகை குழுமங்கள்; உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சதாசிவம், சௌகான், கே.எஸ். இராதாகிருஷ்ணன் தொடங்கி ஓய்வுபெற்றுச் சென்றுவிட்ட நீதிபதி தினகர், தங்கராசு உள்ளிட்ட ஒரு பெரும் அதிகார வர்க்கக் கும்பல் - எனவொரு பெரும் பட்டாளமே ஜெயாவின் விருப்பங்களை ஈடேற்றி வைப்பதற்காக வேலை செய்து வருவது கண்கூடு.

•••

''என்னை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது'' என சட்டசபையிலேயே திமிராக அறிவித்தவர்தான் ஜெயா. கடந்த பதினேழு ஆண்டுகளாக அப்பாசிசதிமிரை அச்சுப்பிசகாமல் நடைமுறைப்படுத்தியும் வருகிறார், அவர். தன் மீது சுமத்தப்பட்ட பல்வேறு வழக்குகளின் விசாரணைகளைச் சட்டப்படியும் நியாயப்படியும் சந்திக்காமல், பல்வேறு குறுக்கு வழிகளைக் கையாண்டு நீதிமன்ற நடவடிக்கைகளைக் கேலிக்குள்ளாக்கி வருகிறார், அவர். தனக்குத் தலையாட்டாத நீதிபதிகளை மிரட்டி விரட்டியடிக்கவும் தயங்காதவர் அவர். ஆனாலும், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகூட இதுவரை பாய்ந்ததில்லை. அந்தளவிற்கு நீதிமன்றங்கள் அவரது செல்வாக்கின் முன் செல்லாக் காசாக உள்ளன.

வாஜ்பாயி ஆட்சிக்காலத்தில் தனது கட்சிக்காரர் தம்பிதுரைக்குச் சட்ட அமைச்சர் பதவியை வாங்கிக் கொடுத்து, தன் மீதான வழக்குகள் அனைத்தையும் ஊத்தி மூடிவிடவும் முயன்றார். அது முடியாமல் போன பிறகு, தனது சுயநலம் காரணமாக வாஜ்பாயி ஆட்சியைக் கவிழ்க்கவும் செய்தார். சட்டம், நீதி பரிபாலனம் உள்ளிட்டு சொல்லிக் கொள்ளப்படும் எந்தவொரு அறத்திற்கும்

இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டுதான், சொத்துக்குவிப்பு வழக்கில் நியாயமாக நடந்துகொண்ட அரசு வழக்குரைஞர் ஆச்சார்யாவுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி, அவரைத் தாமே பதவியிலிருந்து விலகிக் கொள்ளும்படி செய்தார். ஆச்சார்யாவைப் போலத் தமக்குத் தலையாட்டாமல் நடந்துவரும் நீதிபதி குன்ஹா மீது கொலைவெறியோடு இருக்கும் ஜெயா கும்பல் அவருக்கு இன்னும் என்னென்ன குடைச்சல்களைக் கொடுக்குமோ?

● செல்வம்

தலையங்கத் தொடர்ச்சி...

நீதித்துறை ஆகிய அனைத்து நிறுவனங்களின் பெயரளவிலான சுயேச்சைத்தன்மையும் அதிகாரமும் பறிக்கப்பட்டு, அதிகாரம் முழுவதும் ஒழுங்குமுறை ஆணையங்கள், நிபுணர் குழுக்கள் என கார்ப்பரேட் விசுவாச அதிகார வர்க்கத்திடமும் உள்நாட்டு - வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் கைகளுக்கும் மாற்றப்பட்டுவிட்டன.

இன்னொருபுறம், ஓட்டுக்கட்சிகள், அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், நீதித்துறை போன்ற அரசின் உறுப்புகள் அனைத்தும் தாங்களே கூறிக்கொள்ளும் விதிகள், மரபுகள் ஆகியவற்றைத் தூக்கியெறிந்துவிட்டு, இலஞ்சம், மோசடி, பித்தலாட்டம் உள்ளிட்ட ஒழுக்கக் கேடுகள்தான் தங்கள் விழுமியங்கள் என்று அம்மணமாக நிற்கின்றன. இந்த அரசுக் கட்டமைப்பு நிமிர்த்தவே முடியாத வண்ணம் உளுத்துச் சரிந்துவிட்டது என்று புலம்பும் நிலையை ஆளும் வர்க்க சித்தாந்தவாதிகளே எய்தி விட்டனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று கூறப்படுவோர் முதல், அதிகாரிகள், நீதித்துறை உள்ளிட்ட அனைவரும் மக்களின் எதிரிகளாக, கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் அடியாட்படையாக அணிவகுத்து நிற்கின்றனர்.

தங்களைப் பற்றி மக்கள் வைத்திருக்கும் தப்பபிப்பிராயங்களை அவர்களே ஒவ்வொன்றாக நொறுக்கி வருகின்றனர். வாக்குப்பதிவு முடியும் வரை காத்திருந்து மறுநாளே மின் கட்டணத்தை உயர்த்தும் அரசு, தானே கூறிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அணுசக்தித்துறை செய்ய மறுத்த போதிலும், அணு உலைக்கு அனுமதி வழங்கும் உச்சநீதிமன்றம், அம்பானியின் எரிவாயுக் கொள்ளையை ஆதரித்து நிற்கும் சர்வகட்சிக் கூட்டணி - இந்த அரசமைப்பின் யோக்கியதையைப் பறைசாற்றும் எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் நம் முன் அணிவகுத்து நிற்கின்றன. வாக்குரிமை ஒன்றை மட்டும் காட்டி, மக்களுக்கு ஜனநாயகம் இருப்பதாகப் பேசுவது மாய்மாலம் என்று விளங்கவில்லையா? ஓட்டுப் போடுவது ஜனநாயகக் கடமையல்ல, மடமை என்பது இப்போது புரியவில்லையா?

மின்கட்டண உயர்வு, கல்விக் கட்டண உயர்வு, தண்ணீர் வணிகம், மீதேன், ஜிண்டால், கூடங்குளம், விசைத்தறிகளின் அழிவு, தாதுமணற்கொள்ளை, ஆற்றுமணற்கொள்ளை - எனப் பிரச்சினை எதுவானாலும், இந்த அரசு அதற்கு வைத்திருக்கும் இறுதித் தீர்வு, அடக்குமுறை ஒன்றுதான். இருக்கின்ற வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு மக்கள் முன் இருக்கும் ஒரேவழி அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்வதுதான். போராட்டங்கள் - எழுச்சிகள் மூலம் தமக்கான மாற்று அதிகாரத்தை நிறுவிக் கொள்வதுதான் மக்கள்முன் இருக்கும் ஒரே தீர்வு.

●

## ஒளிரும் குஜராத்:

# இராம ஜென்மபூமி பாகம் 2

**மறுகாலனியாதிக்கத்தின் மூலம் முன்னேற்றம், வளர்ச்சி, சொர்க்கம் என ஆளும் வர்க்கம் உருவாக்கிவரும் கருத்தாக்கத்தின் குறியீடான குஜராத், இராம ஜென்மபூமியைப் போன்றதொரு பொய்மைதான்.**

அன்றைய ''இராம ஜென்மபூமி'' யும் இன்றைய ''ஒளிரும் குஜராத்''தும் வேறு வேறானவையா? இல்லை. இரண்டும் புனைவுகள்தான். முன்னது ஆர்.எஸ்.எஸ் - இன் சொந்த சரக்கு; பின்னது இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் தந்த சரக்கு என்பதுதான் வேறுபாடு. இராமாயணம் என்ற புனைகதையை, ஒரு நம்பிக்கையாக மக்கள் மனதில் நிலைநாட்ட பார்ப்பனர்களுக்கு சில நூறு ஆண்டுகள் தேவைப்பட்டன. ஆனால், ஒளிரும் குஜராத் என்ற புனைசுருட்டை, மிகக் குறுகிய காலத்தில் ஒரு 'தேசிய' மூடநம்பிக்கையாக நிலைநிறுத்தி விட்டது, இந்தியத் தரகு முதலாளி வர்க்கம்.

''ஒளிரும் குஜராத்'' என்பது ஒரு குறியீடு. மறுகாலனியாக்கத்தின் மூலம் முன்னேற்றம், வளர்ச்சி, சொர்க்கம் என்று ஆளும் வர்க்கம் உருவாக்கும் கருத்தாக்கம்தான் அதன் உள்ளடக்கம். தீவிரமான வர்க்கச் சுரண்டலையும் ஏற்றத்தாழ்வையும் நியாயப்படுத்தும் இந்தக் கருத்தாக்கத்தின் இதயமாக இந்துத்துவம் மறைந்திருக்கிறது.

''நாளைய பிரதமர் மோடி'' என்ற முழக்கம், இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் தீர்மானித்த நிகழ்ச்சி நிரல்தான் என்பது இன்று முற்றுமுழுதாக அம்பலமாகிவிட்டது. இந்த முடிவுக்கு இந்திய கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் வந்ததைப் பற்றித் தனது கட்டுரையொன்றில் விளக்குகிறார் சித்தார்த் வரதராஜன் (தி இந்து நாளேட்டின் முன்னாள் ஆசிரியர்).

மன்மோகன் அரசு 2009-இல், இரண்டாம் முறையாகப் பதவி ஏற்றிருந்த அந்த ஆண்டிலேயே, கார்ப்பரேட் வர்க்கத்தின் இந்தக் கனவு துவங்கி விட்டது. ''மோடியின் தலைமையில் குஜராத் எல்லா துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறது; இந்த தேசத்துக்கு தலைமையேற்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தால், எப்படி இருக்கும்; எண்ணிப் பாருங்கள்'' என அன்றே ''வைப்ரன்ட் குஜராத்'' நிகழ்ச்சியில் பேசினார் அனில் அம்பானி. உடனே மிட்டல் உள்ளிட்டோர் அதனை வழிமொழிந்தனர். 2010-இல் மேற்கு வங்கத்திலிருந்து விரட்டப்பட்ட டாடாவுக்கு குஜராத்தில் சர்வ மானியம் அளித்து மோடி குடியேற்றியவுடன், ''வீடற்றவர்களாக நடுத்தெருவில் நின்ற எங்களுக்குத் தஞ்சமளித்தவர் மோடி'' என்று நெகிழ்ந்தார் டாடா மோட்டார்ஸின் எம்.டி. ரவி காந்த். ''மற்ற மாநிலங்களில் தொழில் தொடங்க உரிமம் பெறுவதற்கு 6 மாதங்கள் ஆகும்; குஜராத்தில் இரண்டே நாட்கள்தான்'' என்று மோடியின் ஒற்றைச் சாளர நிர்வாகத்தைப் புகழ்ந்தார் டாடா.

''குஜராத் மாநிலமே ஒரு தங்கக் குத்துவிளக்காக மின்னுவதாகவும், அதன் பெருமை அனைத்தும் மோடியையே சேரும்'' என்றும் 2011-இல் புகழ்ந்து, பிரதமர் பதவிக்கு சிபாரிசு செய்தார் முகேஷ் அம்பானி. ''இன்று சீனாவைப் போன்ற வளர்ச்சி என்று எல்லோரும் பேசுகிறார்கள். விரைவில் குஜராத்தைப் போல வளர




அதானிதான் மோடியின் அதிகாரபூர்வ ஸ்பான்சர்; ''சர்வதேச அரங்கில் குஜராத்தின் கவுரவம் குலைக்கப்படுவதை எதிர்த்து'' [இனப்படுகொலைக்காக] 2002 - இலேயே குரல் கொடுத்தவர்.

வேண்டும் என்று சீனாவில் பேசப்போகிறார்கள். அந்த நாள் தொலைவில் இல்லை'' என்று 2013 - ஆம் ஆண்டு ''வைப்ரன்ட் குஜராத்'' நிகழ்ச்சியில் பேசினார் ஆனந்த் மகிந்திரா. இவையெல்லாம் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. மோடியின் பத்தாண்டு ஆட்சியில் தனது சொத்தைப் பத்து மடங்கு பெருக்கிக் கொண்ட அதானியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவர்தான் மோடியின் அதிகாரபூர்வ ஸ்பான்சர்; ''சர்வதேச அரங்கில் குஜராத்தின் கவுரவம் குலைக்கப்படுவதை எதிர்த்து'' (இனப்படுகொலைக்காக) 2002 - இலேயே குரல் கொடுத்தவர்.

ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதியை இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் இப்படியெல்லாம் துதிபாடிப் பதவியில் அமர்த்த துடித்தது இந்திய அரசியலில் இதுவரை நடந்ததில்லை. அதுவும் முதலாளிகளுக்குச் சலுகை வழங்குவதில் ''நீ, நான்'' என்று மாநில முதல்வர்கள் போட்டி போடும் இந்தக் காலத்தில், இனப்படுகொலை குற்றவாளி என்று அம்பலப்பட்டுப்போன ஒரு நபரை, முதலாளி வர்க்கம் இந்த அளவுக்குத் தலையில் வைத்துக் கொண்டாடுவதிலிருந்தே மோடியின் தனிச்சிறப்பை யாரும் ஊகிக்க முடியும்.

மோடி, குஜராத்தின் கடற்கரையையும், விளைநிலங்களையும் அதானி, டாடா, அம்பானி சகோதரர்கள் முதல் பன்னாட்டு நிறுவனங்கள் வரையிலான அனைவருக்கும் வாரிக் கொடுத்ததும், வரிச்சலுகைகள் - மானியங்கள் அளித்ததும் ஏற்கனவே அம்பலமாகியிருக்கின்றன. கேட்பதற்கு முன் வாரிவழங்கும் மோடியின் பரந்த உள்ளத்தைக் காட்டிலும் முதலாளிகளுக்குப் பிடித்திருப்பது மோடியின் வேகம். சட்டம்-நெறிமுறை எதையும் பொருட்படுத்தாத வேகம்! 8 அமைச்சரவைகளைக் கையில் வைத்துக் கொண்டு மோடி என்ற ஒற்றைச் சாளரத்திலேயே முதலாளிகளுக்கு எல்லாவற்றையும் முடித்துத் தரும் நிர்வாகத்திறன் அல்லது சர்வாதிகாரம்! மக்களின் எதிர்ப்பு இயக்கங்களை இல்லாதொழிக்கும் சாமர்த்தியம் அல்லது துணிச்சல்!




**கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவுக்குள் வந்த மொத்த அந்நிய முதலீடு 7000 கோடி டாலர்கள்தான் என்று ரிசர்வ் வங்கி கூற, பத்தாண்டு மோடி ஆட்சியில் 8 இலட்சம் கோடி டாலர் அந்நிய முதலீடு குஜராத்திற்கு வந்திருப்பதாக வைப்ரன்ட் குஜராத் இணையதளம் புளுகி இருக்கிறது.**

2009 முதல் 2012 வரையிலான இந்தக் காலத்தில்தான் கலிங்காநகர், போஸ்கோ, நியம்கிரி முதலான போராட்டங்கள் நடந்தன. ராடியா டேப்புகள் வெளியாகின. தங்களது அந்தப்புர இரகசியங்களைக் காப்பாற்றுவதற்குக்கூட முடியாத அளவு இந்திய ஜனநாயகம் பலவீனமடைந்திருப்பதை எண்ணிக் குமுறினார் டாடா. முகேஷ் அம்பானி, டாடா உள்ளிட்ட தரகு முதலாளிகள் தொழில் செய்வதற்குரிய சூழல் இந்தியாவில் இல்லையென்றும், வெளிநாட்டில் முதலீடு செய்வதாகவும் பகிரங்கமாக அரசை மிரட்டினர்.

இதனைத் தொடர்ந்து முதலாளிகளைத் தாஜா செய்வதற்கான நடவடிக்கைகளில் மன்மோகன் அரசு ஈடுபட்டது. என்றபோதிலும், சிங்குர், மாருதி உள்ளிட்ட பிரச்சினைகளில் துணிச்சலாக முதலாளி வர்க்கத்துக்கு அடியாள் வேலை பார்த்த மோடியைத்தான் ஆளும் வர்க்கம் விரும்பியது. இந்தப் பின்புலத்திலும் சில்லறை வணிகம், ஓய்வூதிய நிதி உள்ளிட்டவற்றைத் திறந்து விடுவதில் மன்மோகன் அரசு காட்டிய தாமதம் போன்ற பல காரணங்களினாலும்தான், மோடியைப் புகழ்ந்து எழுதிய அமெரிக்க டைம்ஸ் வார ஏடு, மன்மோகனை ''அண்டர் அச்சீவர்'' என்று விமரிசித்தது.

தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மோடியைக் கொண்டு வருவதற்கு இன்று காட்டிவரும் வெறி, பாபர் மசூதியை இடிப்பதற்கு அன்று அத்வானி காட்டிய வெறியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானது. இது முதலாளிகளிடம் வெளிப்படும் வழக்கமான இலாப வெறி அல்ல; கடற் கொள்ளையர்களிடம் மட்டுமே காணத்தக்க வெறி! இதற்கும் ஒரு பின்புலமிருக்கிறது.

நிலக்கரி, இரும்பு, பாக்சைட் உள்ளிட்ட கனிம வளங்கள், நீர்வளம், நிலவளம், கடல்வளம், எண்ணெய், எரிவாயு, காடுகள், மலைகள் முதல் அலைக்கற்றை வரையிலான எல்லா பொதுச்சொத்துக்களையும் இலவசமாகவோ, அடிமாட்டு விலைக்கோ கைப்பற்றிக் கொள்வதற்கான போட்டி இன்று உலகெங்கும் தீவிர

மடைந்திருக்கிறது. 2008-க்குப் பிந்தைய பொருளாதார மந்தத்திலிருந்து மீளவழி தெரியாமல், உலக முதலாளித் துவம் திணறுகிறது. சந்தைகளின் தேக்கம், மிகை உற் பத்தி ஆகியவற்றின் காரணமாக தொழில் உற்பத்தி முடங்கிக் கிடக்கிறது. மூலதனத்தின் ரத்தப்பசியைத் தீர்ப்பதற்கு, பொதுச்சொத்துக்களைக் கொள்ளையடிப் பதும் நிதி மூலதனச் சூதாட்டமுமே முதலாளி வர்க்கம் தெரிவு செய்யத்தக்க தொழில்களாக இன்று எஞ்சியிருக் கின்றன. சூதாட்டத்தைக் காட்டிலும் உத்திரவாதமானது கொள்ளை என்ற உண்மையை விளக்கத் தேவை யில்லை. இந்தக் கொள்ளைதான் இந்தியத் தரகு முதலாளி களின் இலாப விகிதத்தை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து, அவர்களில் பலரை உலக கோடீ சுவரர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

மக்கள் போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள், மாவோயிஸ்டு பிரச்சினை, சுற்றுச் சூழல் அமைச்சகத் தின் தொந்திரவுகள் போன்றவற்றால் இந்தக் கொள்ளை யைத் தாங்கள் விரும்பிய வேகத்தில் நடத்த முடிய வில்லை என்பதுதான் காங்கிரசு அரசின் மீது தரகு முத லாளிகள் கோபம் கொள்ளக் காரணம். மாறாக, சுற்றுச் சூழல் தடையகற்றுதல் (environmental clearance) குறிப் பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்துத் தரப்படும் என்று கூறும் மோடியின் தேர்தல் அறிக்கை அவர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறது.

‘‘சுற்றுச்சூழலைப் பேணுதல், பழங்குடி மக்களின் உரிமை, விவசாயிகளின் உரிமை’’ என்பன போன்ற பசப்பு வார்த்தைகள் ஏதுமின்றி, மரங்கள், மலைகள் முதல் பழங்குடிகள், மீனவர்கள் வரையிலான அனைத்தையும், நாட்டின் ‘வளர்ச்சி’க்காக அகற்றப்பட வேண்டிய தடைகளாக மோடி கருதுகிறார் என்பது மட்டு மின்றி, இந்து ராஷ்டிரத்துக்கான தடையகற்றும் நடவடிக் கைகளை அவர் ஏற்கனவே குஜராத்தில் வெற்றிகரமாக செய்தும் காட்டியிருக்கிறார் என்பதால், மோடியை இயல் பாகவே அவர்கள் ஆதரிக்கிறார்கள். பிரதமர் பதவியின் மீது மோடி என்ற பாசிஸ்டு கொண்டிருக்கும் மோகத்தைக் காட்டிலும், பிரதமர் நாற்காலியில் மோடியை அமர்த்துவதற்கு கார்ப்பரேட் முதலாளிகள் காட்டும் வேகம் சற்று அதிகமாகவே இருக்கிறது.

80-களில் ராம ஜென்மபூமி என்ற கட்டுக்கதையை யும் இந்துத்துவ அரசியலையும் எதிர்த்து எழுதுவதற்கு, பல்வேறு சிந்தனைப் போக்குகளைச் சார்ந்த அறிவுத் துறையினரும் இருந்தனர். வெளியிடுவதற்கும் ஊடகங் களில் ஓரளவு இடமிருந்தது. இன்றோ தொலைக் காட்சிகள், பத்திரிகைகள், இணையம் என எல்லா ஊட கங்களும் மோடிக்காக குரைக்கின்றன. முன்னர் பார்ப் பன மதத்தை எதிர்த்தவர்கள் வேட்டையாடிக் கொன்றொழிக்கப் பட்டதைப் போலவே, இன்று மோடியை விமரிசிக்கும் ஊடகவியலாளர்கள் பணி யிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்; தாக்கப்படு கிறார்கள்.

ஒளிரும் குஜராத் என்பது முதலாளி வர்க்கத்தால் படைக்கப்பட்ட கடவுள். மோடி அதன் தலைமைப் பூசாரி. தனது கடவுளோ, பூசாரியோ கேள்விக்குள்ளாக் கப்படுவதைத் தரகு முதலாளி வர்க்கம் விரும்பவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

ஒளிரும் குஜராத் என்ற புனைவைத் தகர்க்கும் புள்ளி விவரங்கள் அன்றாடம் வந்த வண்ணம்தான் இருக் கின்றன. கிராமப்புறத்தில் நாளொன்றுக்கு 11 ரூபாய்க்கு குறைவாக ஈட்டுவோரே வறியவர்கள் என்ற குஜராத் அரசின் வரையறை, 4.5 இலட்சம் மாநில அரசு ஊழியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக அமர்த்தப்பட்டி ருப்பது, நகர்ப்புற சேரிகளில் 75% வீடுகளுக்கு மின்சாரம் இல்லாமலிருப்பது, இந்தியாவிலேயே அதிக கடன் பட்ட மாநிலங்களில் குஜராத் மூன்றாம் இடத்தில் இருப்பது, கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவுக்குள் வந்த மொத்த அந்நிய முதலீடு 7000 கோடி டாலர்கள் தான் என்று ரிசர்வ் வங்கி கூற, பத்தாண்டு மோடி ஆட்சியில் 8 இலட்சம் கோடி டாலர் அந்நிய முதலீடு குஜராத்திற்கு வந்திருப்பதாக வைப்ரன்ட் குஜராத் இணைய தளம் புளுகுவது... என அடுக்கடுக்காக உண்மைகள் வருகின்றன.

மோடியின் குற்றங்கள், குஜராத் அரசின் ஊழல்கள் பற்றிய சி.ஏ.ஜி.- யின் அறிக்கை, நிலப்பறிப்புக்கும் அணு உலைக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள் என அடுத்தடுத்து செய்திகள் வருகின்றன. ஆனால், அனைத்



2010- இல் மேற்கு வங்கத்திலிருந்து விரட்டப்பட்ட டாடாவுக்கு குஜராத்தில் சர்வமானியம் அளித்து மோடி குடியேற்றியவுடன், ‘‘வீடற்றவர்களாக நடுத்தெருவில் நின்ற எங்களுக்குத் தஞ்சமளித்தவர் மோடி’’ என்று நெகிழ்ந்தார் டாடா மோட்டார்ஸின் எம்.டி. ரவிகாந்த்.



***''குஜராத் மாநிலமே ஒரு தங்கக் குத்துவிளக்காக மின்னுவதாகவும், அதன் பெருமை அனைத்தும் மோடியையே சேரும்'' என்றும் 2011-இல் புகழ்ந்து, பிரதமர் பதவிக்கு சிபாரிசு செய்தார் முகேஷ் அம்பானி.***

தும் மோடி ஆதரவு பிரச்சாரம் எனும் அடைமழையில் மூழ்கடிக்கப்படுகின்றன.

இந்துக்களின் வெகுளித்தனமான மத நம்பிக்கையை, தனது இராம ஜென்மபூமி என்ற சதித்திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டதைப் போலவே, இன்று தனியார்மயத் தாக்குதல்கள், ஊழல், விலை உயர்வு போன்ற பல காரணங்களால் காங்கிரசு அரசின் மீது அதிருப்தியுற்று, ஏதேனும் ஒரு மாற்றத்துக்காக ஏங்குகின்ற, ஆனால் என்ன மாற்றம் வேண்டும் என்று அறிந்திராத மக்களிடம், ஒளிரும் குஜராத்தைப் புதிய கடவுளாகவும், மோடியை மீட்பனாகவும் சந்தைப்படுத்துகிறது பா.ஜ.கட்சி.

ஒரு வகையில், ஒளிரும் குஜராத் என்பதே புதிய மொந்தையில் பழைய கள்ளுதான். 2004 பொதுத்தேர்தல் பிரச்சாரத்தில், ஆடு மேய்ப்பவர்களும் செல்போன் வைத்திருப்பதைக் காட்டி, ''இந்தியா ஒளிர்கிறது'' என்று பிரச்சாரம் செய்தது பாரதிய ஜனதா. இந்தியா ஒளிரவில்லை என்பதைத் தம் சொந்த அனுபவத்தில் உணர்ந்திருந்த மக்கள் பாரதிய ஜனதாவைத் தோற்கடித்தார்கள். அதனால்தான் மக்கள் தமது சொந்த அனுபவத்தில் கண்டுபிடிக்க முடியாததும், சிங்கப்பூர், துபாயைப் போல எங்கோ இருப்பதும், யாரும் காணாததுமான குஜராத்தின் படத்தைக் காட்டி ஒளிர்கிறது, ஒளிர்கிறது என்று கூவுகிறது.

இராம ஜென்மபூமி என்ற புனைகதையை வரலாற்றாசிரியர்களும், தொல்லியல் ஆய்வாளர்களும் ஆதாரங்களுடன் கேள்விக்குள்ளாக்கிய போது, அவர்களை இந்து விரோதிகள் என்று பார்ப்பன பாசிஸ்டுகள் சாடியதைப் போலவே, இன்று குஜராத்தின் வளர்ச்சியைக் கேள்விக்குள்ளாக்கியவுடனே கேஜ்ரிவாலையும் பாகிஸ்தான் கைக்கூலி என்று முத்திரை குத்துகிறார் மோடி. ஒரு சிறிய விமரிசனமே மோடியின் கனவான் மேக்கப்பைக் கலைத்து அவரது உண்மைச் சொரூபத்தை வெளிக்கொணர்ந்து விடுகிறது.

''மோடியைத் தீமையின் உருவமாக சித்தரிப்பதன் மூலம் அவரை வீழ்த்திவிட முடியாது. ஏனென்றால், இளைய தலைமுறைக்குத் தீமைதான் கவர்ச்சிகரமானதாகத் தெரிகிறது; 'நான், எனது' என்று மோடி, தன்னை மட்டுமே முன்நிறுத்திப் பேசுவதும்கூட சுய முன்னேற்றத்தை விரும்பும் இன்றைய தலைமுறைக்குப் பிடிக்கத்தான் செய்யும். நெறிகளைப் பேசிப் பயனில்லை, வெற்றி பெறுவது எதுவோ அதுவே சிறந்த நெறி'' என்று அம்பானிக்குச் சொந்தமான ஃபர்ஸ்ட் போஸ்ட் என்ற இணைய இதழில் அதன் ஆசிரியர் கட்டுரை எழுதுகிறார்.

இது மோடிக்கு ஆதரவான வெறிபிடித்த எழுத்து என்றபோதிலும், மோடியை ஆதரிக்கும் புதிய நடுத்தர வர்க்கத்தினரின் உளவியலை இது சரியாகத்தான் சொல்கிறது. 2002 இனப்படுகொலை என்பது இந்தப் பிரிவினருக்கெல்லாம் தெரியாத உண்மையல்ல; ஆனால் மோடிக்கு எதிராக நீங்கள் எத்தனை ஆதாரங்களைக் கொடுத்தாலும், ''நிரூபிக்க முடியுமா?'' என்று மடக்குவார்கள். அதேபோலத்தான், குஜராத்தின் பொய்மைகளை அம்பலப்படுத்துவோரையும் அவர்கள் மடக்குகிறார்கள். மோடி இந்துத்துவ அரசியலைப் பேசாமல் தவிர்ப்பதையும், ராஜ்நாத் சிங் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்பதையும், அதே நேரத்தில் அமித் ஷா பழிவாங்கச் சொல்வதையும் முரண்பாடுகளாகவோ சந்தர்ப்பவாதமாகவோ இவர்கள் கருதுவதில்லை. மாறாக, இதனைச் சாமர்த்தியம் என்று மெச்சுகிறார்கள்.

மோடியின் காலாட்படைகள் அனைவரும் முன்னாள் கரசேவகர்களாகவோ, இந்து வெறியர்களாகவோ இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. இந்து மத நம்பிக்கை கொண்டவர்களை மட்டும்தான் ராமபிரானால் அன்று திரட்ட முடிந்தது. ஒளிரும் குஜராத் என்ற இந்தப் புதுக்கடவுளோ, ஜக்கி வாசுதேவ், ரவி சங்கர்ஜி போன்ற கார்ப்பரேட் சாமியார்களை ஒத்தது. இது, இந்து மத நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒருவகை கார்ப்பரேட் மத நம்பிக்கை. வாழும் கலையால் வனைந்து உருவாக்கப்பட்ட புதிய பார்ப்பன மதம். இந்த நம்பிக்கையின் மத உள்ளடக்கம், ஏறத்தாழ மோடி அணிந்துவரும் டிசைனர் குர்த்தாவின் காவி நிறத்துக்கு ஒப்பானது.

மறுகாலனியாக்கம் தோற்றுவித்துள்ள ஏற்றத்தாழ்வை ''வளர்ச்சி'' என்று கொண்டாட முடிகின்ற மனோபாவத்துக்கும், பார்ப்பனியத்துக்குமான இடைவெளி கூப்பிடு தூரம்தான். 2002 படுகொலைக்கு நீதி

கேட்கும் முஸ்லிம் மக்களுக்கு ''வளர்ச்சியை'' வழங்குவதாக வாக்களிக்கிறார் மோடி. அது சிறுபான்மையினர்க்கு வழங்கப்படும் சலுகை அல்ல, அனைவருக்குமான வளர்ச்சி என்றும் வலியுறுத்துகிறார்.

நீதி என்ற சொல்லைப் பார்ப்பனியம் மட்டுமின்றி முதலாளித்துவமும் விரும்புவதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு என்ற 'ஓர வஞ்சனையை' எதிர்ப்பதற்கு, தகுதி-திறமை என்ற 'நடுநிலையான' மாற்றை பார்ப்பனியம் முன்நிறுத்தியதைப் போலவே, 'நீதி'க்கு எதிரான நடுநிலையான மாற்று, 'வளர்ச்சி' என்று முன் நிறுத்துகிறார் மோடி.

சல்வா ஜுடும் கூலிப்படையால் தாய் மண்ணிலிருந்து அகதி முகாம்களுக்கு விரட்டப்பட்டு பழங்குடி மக்கள், 2002 இனப்படுகொலையின் போது வீடும், தொழிலும், உடைமைகளும் பறிக்கப்பட்ட அகதி முகாம்களுக்குத் துரத்தப்பட்ட முஸ்லிம்கள், முசாபர் நகரின் முஸ்லிம் அகதிகள், விவசாய அழிப்பு என்ற அறிவிக்கப்படாத வளர்ச்சித் திட்டத்தின் விளைவாக மாநிலம் விட்டு மாநிலம் நாடோடிகளாக ஓடும் விவசாயிகள் - இவர்கள் வேண்டி நிற்பது வளர்ச்சியா, நீதியா? சட்டீஸ்கரின் அகதி முகாம்களுக்கும், அகமதாபாத்தின் அகதி முகாம்களுக்கும் என்ன வேறுபாடு?

''வலியது வெல்லும்'' என்ற தத்துவத்தைப் பார்ப்பனியப் பின்வாயால் கூறி வந்த மோடி, இனி அதனை முதலாளித்துவ முன்வாயால் முழங்குவார் என்பதைத் தவிர பார்ப்பன பாசிசத் தாக்குதலுக்கும், மறுகாலனியாக்கத் தாக்குதலுக்கும் வேறு என்ன வேறுபாடு? மனித முகம் கொண்ட ''வளர்ச்சி''யும் இல்லை, மனித முகம் கொண்ட ராமராச்சியமும் இல்லை. எனவே, மோடியின் மனித முகம் என்பது ஒரு முகமூடி.

''நல்ல இந்து மதம், மத நல்லிணக்கம்'' போன்ற வாதங்களின் மூலமன்றி, பார்ப்பன இந்து மதத்தைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம்தான் பார்ப்பன பாசிசத்தை வீழ்த்த முடியும். அதேபோல, எந்த வர்க்கத்துக்கான ''வளர்ச்சி'' என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம்தான், மறுகாலனியாக்க கொள்ளையையும், முதலாளித்துவக் கொள்ளையர்களின் சொர்க்கபுரியான குஜராத்தின் உண்மை முகத்தையும் மக்களுக்குக் காட்ட முடியும். இல்லையேல், ''நல்ல முதலாளித்துவம், மனித முகம் கொண்ட வளர்ச்சி'' என்பன போன்ற பித்தலாட்டங்களுக்கு நாம் பலியாக வேண்டியிருக்கும்.

''குஜராத் - இந்துத்துவத்தின் சோதனைச்சாலை என்பதை வர்க்கக் கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ளுங்கள்'' என்று தங்களது நடவடிக்கைகள் மூலம், டாடா, அம்பானி, அதானி போன்ற தரகு முதலாளிகள் மீண்டும் மீண்டும் நமக்கு வலியுறுத்திச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைத்தான் ஒருமுறை கேட்டுப் பாருங்களேன்.

● சூரியன்



*2002 இனப்படுகொலை என்பது மோடியை ஆதரிக்கும் புதிய நடுத்தர வர்க்கத்தினருக்குத் தெரியாத உண்மையல்ல; ஆனால் மோடிக்கு எதிராக நீங்கள் எத்தனை ஆதாரங்களைக் கொடுத்தாலும், ''நிரூபிக்க முடியுமா?'' என்று மடக்குவார்கள்.*

## மோடியை விஞ்சுகிறார் லேடி!



ஒளிரும் குஜராத், விஷன் தமிழ்நாடு போன்ற எல்லாமே மெக்கின்சி போன்ற பன்னாட்டு கன்சல்டன்சி நிறுவனங்களும், ஃபிக்கி, சி.ஐ.ஐ. போன்ற இந்தியத் தரகு முதலாளித்துவ சங்கங்களும் தத்தம் எதிர்கால தொழில் வளர்ச்சியை மனதிற்கொண்டு வழுவழு தாளில் அடித்துக் கொடுக்கும் விளம்பரக் காகிதங்கள் என்பதே உண்மை. அவற்றைத் தமது சொந்தக் கண்டுபிடிப்புகள் போல மோடியும் ஜெயாவும் சந்தைப்படுத்திக் கொள்கிறார்கள்.

தமிழகத்தில் 12 மணி நேர மின்வெட்டு, பத்து இலட்சம் விசைத்தறி முதலாளிகள் - தொழிலாளர்களின் போராட்டம், குடிக்கத் தண்ணீரில்லாமல் எங்கு நோக்கினும் பெண்களின் சாலை மறியல் போராட்டம் என இத்தனையும் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில்தான், இவை எதையும் பற்றிக் கவலைப் படாமல், தமிழகம் முதன்மை மாநிலம் என்று பொளந்து கட்டிக் கொண்டிருந்தார் புரட்சித் தலைவி. எங்கோ இருக்கும் குஜராத்தைக் காட்டி ஏமாற்றுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

# புதுவை பல்கலைக்கழகம்:

# பார்ப்பனக் கொட்டத்தை அடக்கிய மாணவர் போராட்டம்!

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மத்திய பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பார்ப்பனக் கும்பல் அதிகாரத்தில் அமர்ந்துகொண்டு, பார்ப்பனச் சாதித் திமிருடனும், அதிகார போதையிலும் கொட்டமடிப்பது என்பது ஒரு பொதுப்போக்காகவே இருந்து வருகிறது.

புதுவைப் பல்கலைக்கழகமும் இதற்கு விதிவிலக்கில்லை. துணைவேந்தர் சந்திரா கிருஷ்ணாமூர்த்தி மற்றும் பல்கலைக்கழகத்தின் அகடமிக் ஸ்டாஃப் காலேஜ் இயக்குனரான ஹரிஹரன் தலைமையிலான பார்ப்பனக் கும்பலின் யோக்கியதை, அப்பாவி ஏழை மாணவன் மீது திருட்டுப்பழி சுமத்தி, அவரை மிருகத்தனமாகத் தாக்கி கீழ்த்தரமான முறையில் நடத்திய விவகாரத்தில் அம்பலப்பட்டு நாறிப் போனது.

புதுவைப் பல்கலைக்கழக விடுதியில் தங்கிப் பயிலும் முதுகலைத் தமிழ் முதலாமாண்டு மாணவன் ராதாகிருஷ்ணன். விடுதியிலுள்ள சக மாணவர்களின் உடைகளைத் திருடினார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டு. ஏழ்மையின் காரணமாகத் தான் செய்துவிட்ட தவறுக்கு நேர்மையாக மன்னிப்புக் கேட்டுத் தன்னிடமிருந்த பிற மாணவர்களது உடைகளை ஒப்படைத்தார் ராதாகிருஷ்ணன்.

உடையைத் திருடிய விவகாரத்தில் ஏழை மாணவன் சிக்கியதையடுத்து, பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற அனைத்துத் திருட்டுக் குற்றங்களையும் ராதாகிருஷ்ணன் மீது சுமத்தியது, பல்கலைக்கழகத்தின் இயக்குனர் ஹரிஹரன், தனியார் பாதுகாப்பு அதிகாரி சியாம் மற்றும் பேராசிரியர் பூஷன் ஆகியோர் அடங்கிய பார்ப்பனக் கும்பல். மேலும், பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மகளிர் விடுதிக்குள் நிர்வாணமாக நுழைய முயன்ற மர்ம நபரும் ராதாகிருஷ்ணன்தான் என்று அவர் மீதே பழியைப் போட்டது.

ராதாகிருஷ்ணன் தவறிழைத்திருப்பதாக நிர்வாகம் சந்தேகித்தால் முறையாக போலீசிடம் புகார் அளித்து சட்டரீதியான நடவடிக்கைகளைத்தான் மேற்கொண்டிருக்க வேண்டும். மாறாக, விசாரணை என்ற பெயரில் இராதாகிருஷ்ணனைச் சட்டவிரோதமாக வாகனத்தில் கடத்திச் சென்று மிருகத்தனமாகத் தாக்கியது, ஹரிஹரன் கும்பல். ஊருக்கெல்லாம் சட்டம், நீதி, நேர்மை குறித்து நீட்டி முழக்கும் இப்பார்ப்பனக் கும்பல், இராதாகிருஷ்ணன் விவகாரத்தில் ரவுடிகளைப் போல கீழ்த்தரமாக நடந்து கொண்டது.

கண்ணெதிரே அப்பாவி மாணவனுக்கு அநீதி நடப்பதைக் கண்டு ஆத்திரம் கொண்ட இப்பல்கலைக்கழக மாணவர்கள் ஹரிஹரன் தலைமையிலான கும்பலுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தனர். மாணவர்களின் போராட்டத்தையடுத்து அமைக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குழு, ''பிற மாணவர்களின் உடைகளை எடுத்ததைத் தவிர, இராதாகிருஷ்ணன் வேறெந்த தவறும் செய்திருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை'' என்று அறிக்கை அளித்தது.

ராதாகிருஷ்ணனை அவமானப்படுத்தி அடித்துச் சித்திரவதை செய்த ஹரிஹரன் தலைமையிலான கும்பல் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டுமென்றும்; அக்கும்பலை கைது செய்து சிறையிலடைக்க வேண்டுமென்றும் கோரி தொடர்ச்சியானப் போராட்டங்களை மாணவிகளின் பங்கேற்புடன் நடத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள். இப்போராட்டங்களின் விளைவாக, ஹரிஹரன் கும்பல் மீது முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஓய்வுபெற்ற நீதிபதி, போலீசு அதிகாரி, புதுவை எஸ்.பி., உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்; ஹரிஹரன் கும்பல் விசாரிக்கப்படும் பொழுது மாணவர் பிரதிநிதிகளும் உடனிருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஏப்ரல்-15 அன்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழா மேடையிலேயே துணைவேந்தரை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர், பல்கலைக்கழக மாணவர்கள். மாணவர்களின் உறுதியானப் போராட்டத்துக்கு அடிபணிந்தது கல்லூரி நிர்வாகம். மாணவர்களின் இப்போராட்டத்தில் தொடக்கம் முதலே உடனிருந்து ஆலோசனைகளை வழங்கிப் பங்கேற்று வருகிறது, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி.

உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் பார்ப்பனக் கும்பலின் கொட்டத்தையும்; தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு எதிராக ஏவப்படும் அடக்குமுறைகளையும் முறியடிப்பதற்கு மாணவர்கள் அமைப்பாக அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தியிருக்கிறது, புதுவைப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம்.

- பு.ஜ.செய்தியாளர், புதுச்சேரி.

ஹரிஹரன் கும்பலைக் கைது செய்யக் கோரி புதுவைப் பல்கலைக்கழக இயக்குனர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராடும் மாணவர்கள்.



# உண்மை சுடுகிறது! பா.ஜ.க. அலறுகிறது!!

**பாபர் மசூதி இடிப்பு ஆர்.எஸ்.எஸ். – இன் திட்டமிடப்பட்ட சதிச்செயல் என்பதை கோப்ரா போஸ்ட் என்ற இணைய இதழ் தக்க ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியிருக்கிறது.**


**கோ**ப்ரா போஸ்ட் என்ற புலனாய்வு இணைய இதழ் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் பாபர் மசூதியை எப்படிச் சதித்தனமான, சட்டவிரோதமான வழியில் இடித்துத் தள்ளி, அந்த இடிபாடுகளுக்கு மத்தியில் ஒரு கொட்டகை அமைத்து, அதனை ராமர் கோவிலாக்கியது என்பதற்கான ஆதாரங்களைச் சமீபத்தில் இணையதளத்தில் வெளியிட்டது. தெகல்கா வார இதழின் நிருபராக இருந்த ஆஷிஷ் கேதான் குஜராத் படுகொலைகளை நடத்திய இந்து மதவெறி பயங்கரவாதிகளை இரகசியமாகப் பேட்டி எடுத்து அம்பலப்படுத்தியதைப் போல, பாபர் மசூதி இடிப்புச் சதியை கோப்ரா போஸ்ட் அம்பலப்படுத்தியிருக்கிறது.


1992, டிசம்பர் 6 அன்று இந்து மதவெறிக் கும்பலால் பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்டது. ''அரசியல் சாசன வழியில் ராமர் கோவிலை அமைக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்'' எனச் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட யோக்கியனைப் போல இன்று பேசும் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல், அன்று உச்ச நீதிமன்றத்திடம் மசூதியை இடிக்க மாட்டோம் எனப் பொய்யான வாக்குறுதியை அளித்துவிட்டு, சதித்தனமாக அம்மசூதியை இடித்துத் தள்ளியது. இத்துரோகத்திற்கு பா.ஜ.க. தலைமையிலிருந்த உ.பி. அரசு மட்டுமின்றி, காங்கிரசு தலைமையிலிருந்த மைய அரசும் துணை போனது.

குஜராத் படுகொலையை கோத்ரா சம்பவத்தின் எதிர்வினை என்று கூறி நியாயப்படுத்தி வருவதைப் போலவே, பாபர் மசூதி இடிப்பை உணர்ச்சிவசப்பட்ட கரசேவகர்களின் தன்னெழுச்சியான செயலாக, எதிர்பாராமல் நடந்துவிட்ட நிகழ்ச்சியாகக் கூறி, இதன் பின்னுள்ள சதித் திட்டத்தை மூடிமறைத்து வருகிறது, ஆர்.எஸ்.எஸ். குறிப்பாக, பாபர் மசூதி இடிப்புக்குத் தளபதியாகச் செயல்பட்ட எல்.கே. அத்வானி, ''இது தனது வாழ்நாளில் நடந்துவிட்ட கறுப்பு தினம்'' என முதலைக் கண்ணீர் விட்டு, தனக்கும் இந்த நிகழ்வுக்கும் சம்பந்தமேயில்லாதது போலக் காட்டிக் கொண்டார்.

இந்த மதவெறிக் கும்பல் பாபர் மசூதி இடிப்புக்கு முன்னும் பின்னும் நடத்திய கலவரங்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்பட்டனர். முசுலீம் தீவிரவாதம் நாட்டின் மீது கவிழ்வதற்குப் பாபர் மசூதி இடிப்புதான் முதன்மையான காரணமாக அமைந்தது. இன்று 35 வயதுக்குள் இருக்கும் இளைஞர்களுக்கு, குறிப்பாக மோடி குறித்த மாயைக்குள் சிக்கியிருக்கும் இளைஞர்களுக்கு இந்த உண்மைகள் தெரியாது. கோப்ரா போஸ்ட் வெளியிட்டுள்ள வீடியோ இந்த உண்மைகளை உரத்துப் பேசியிருக்கிறது.

சங்கப் பரிவார அமைப்புகளைச் சேர்ந்த சாக்ஷி மகராஜ், ஆச்சார்யா தர்மேந்திரா, உமா பாரதி, வினய் கத்தியார் உள்ளிட்ட 23 பேர் அளித்த சாட்சியங்கள் இக்காணொளியில் தொகுக்கப்பட்டுள்ளன. ''கரசேவகர்களுள் 38 பேர் பொறுக்கியெடுக்கப்பட்டு, அவர்களுக்குக் கட்டிடத்தின் மீது ஏறுதல், கோடரி, கடப்பாரை போன்ற ஆயுதங்களைக் கொண்டு கட்டிடங்களை இடித்தல் உள்ளிட்ட பல பயிற்சிகள் குஜராத் மாநிலத்தில் உள்ள சர்கேஜ் எனுமிடத்தில் அளிக்கப்பட்டதையும், முன்னாள் இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் இப்பயிற்சி நடத்தப்பட்டதையும், பாரம்பரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி மசூதியை இடிக்க முடியாவிட்டால், டைனமைட்டைப் பயன்படுத்தி மசூதியைத் தரைமட்டமாக்கும் தனித் திட்டம் வகுக்கப்பட்டிருந்ததையும்'' உள்ளிட்டு, இச்சதி தொடர்பான பல உண்மைகளை கோப்ரா போஸ்ட் இணை ஆசிரியர் கே.ஆஷிஷிடம் இவர்கள் கூறியுள்ளனர். மேலும், ''பா.ஜ.க. தலைவர் அத்வானி, அச்சமயத்தில் உ.பி. முதல்வராக இருந்த கல்யாண் சிங் ஆகியோருக்கு மட்டுமின்றி, பிரதமராக இருந்த நரசிம்ம ராவுக்கும் மசூதி இடித்துத் தள்ளப்படும் சதி திட்டம் தெரியும்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். ''ராமஜென்மபூமி நடவடிக்கை'' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் காணொளியில் காணப்படும் இந்த ஆதாரங்கள் ஏற்கெனவே அம்பலமானவைகள்தான் என்ற போதும் குற்றவாளிகள் தமது வாயால் ஆர்.எஸ்.எஸ். இன் சதியையும் அதில் தமது பாத்திரத்தையும் கூறியிருப்பதுதான் இந்த வீடியோவை முக்கியமான இன்னொரு ஆதாரமாகக் கருத வைக்கிறது.





இந்து மதவெறிக் கும்பலால் சதித்தனமாக இடிக்கப்படும் பாபர் மசூதி. அதனைத் திறந்த வாயை மூடாமல் வக்கிரமான குதூகலிப்போடு கண்டு ரசிக்கும் உமாபாரதி மற்றும் முரளி மனோகர் ஜோஷி. (கோப்புப் படங்கள்)


பாபர்மசூதி இடிப்பு பற்றி கோப்ராபோஸ்ட் தொகுத்த வீடியோ வெளிவரப் போகிறது எனத் தெரிந்ததுமே, அதைத் தடை செய்யக் கோரி தேர்தல் கமிசனிடம் புகார் அளித்தது பா.ஜ.க. ''இது மதரீதியான பிளவை ஏற்படுத்தி, அமைதியான முறையில் தேர்தல் நடக்கும் சூழலைக் கெடுத்துவிடும்'' எனப் பீதியூட்டியது. எனினும், தேர்தல் ஆணையம் இவ்வீடியோ வெளியிடப்படுவதற்குத் தடைவிதிக்க மறுத்துவிட்டது. வீடியோ வெளியான பிறகோ, அதில் தமது வானரப் படையினரே வாக்குமூலங்கள் அளித்திருப்பது பற்றிப் பேச மறுத்துவிட்டு, ''முசுலீம் வாக்குகளைக் கவருவதற்காகத் தேர்தல் சமயத்தில் வெளியிடுகிறார்கள்'' எனக் குற்றஞ்சுமத்தி, பிரச்சினையைத் திசை திருப்பியது அக் கும்பல்.

சாதாரண குற்றவாளிகள்கூடத் தமக்கு எதிராக முன் வைக்கப்படும் ஆதாரங்களுக்கு முகங்கொடுக்க மாட்டார்கள் எனும்பொழுது, ஆர்.எஸ்.எஸ். கும்பல் தமக்கு எதிராக வெளியாகியுள்ள இந்த ஆதாரத்தைப் புறக்கணித்ததும், பிரச்சினையைத் திசைதிருப்ப முயன்றதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், இந்தப் பிரச்சினையைப் பற்றி யார் பேச வேண்டுமோ அவர்கள் - தம்மை மதச்சார்பற்றவர்களாகவும் சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்களாகவும் கூறிக் கொள்ளும் ஓட்டுக் கட்சிகள், நடுநிலையாளர்களாகக் கூறிக் கொள்ளும் தேசியப் பத்திரிகைகள், முதலாளித்துவ அறிவுத்துறையினர் கோப்ராபோஸ்ட் வெளியிட்டுள்ள ஆதாரங்கள் பற்றிப் பேசாமல், மௌனச் சாமியார்களாக நடந்து கொண்டதுதான் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

2ஜி விவகாரத்தில் நீரா ராடியாவுடனான தொலைபேசி உரையாடல்களுள் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து, அதனைத் தொலைக்காட்சி சீரியல் கதை போலத் தினமும் வெளியிட்டு கனிமொழியையும் ராஜாவையும் அம்பலப்படுத்திய தேசிய ஊடகங்கள், பாபர்மசூதி இடிப்பு குறித்து கோப்ராபோஸ்டிடம் இந்து மதவெறிக் கும்பல் அளித்த வாக்குமூலங்களை விளக்கமாக வெளியிடாமல் ஒதுங்கிக் கொண்டது தற்செயலானது அல்ல. ஒரு ஊழல் விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களை அம்பலப்படுத்துவதில் இத்துணை ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்த ஊடகங்களுக்கு, பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய, அக்கிரிமினல் குற்றத்தில் தொடர்புடையவர்களை அம்பலப்படுத்துவதில் அக்கறை இல்லாமல் போனதன் மர்மம் விளங்கிக் கொள்ள முடியாததும் அல்ல. 2ஜி ஊழலில் தி.மு.க.வை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும் தேசிய ஊடகங்கள், பாபர் மசூதி இடிப்பு குற்றத்திலிருந்து ஆர்.எஸ்.எஸ். கும்பலை விடுவித்துவிடும் நோக்கத்தை மறைத்துக்கொண்டு செயல்படுகின்றன. அதனால்தான் கோப்ராபோஸ்ட் அம்பலப்படுத்திய உண்மைகளை ஓரங்கட்டிய ஊடகங்கள், ''தேர்தல் சமயத்தில் இந்த வீடியோவை வெளியிட வேண்டிய அவசியமென்ன?'' என்ற இரண்டாம்பட்சமான கேள்வியை முன்னுக்குக் கொண்டு வந்து, பிரச்சினையைத் திசைதிருப்பும் பா.ஜ.க.வின் முயற்சிக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டன.

பா.ஜ.க. வெளிப்படையான இந்து மதவெறி பாசிஸ்டுகள் என்றால், காங்கிரசு பசுத்தோல் போர்த்திய புலி. பாபர்மசூதி வளாகத்தினுள்திருட்டுத்தனமாக வைக்கப்பட்டிருந்த ராமர் பொம்மையை இந்துக்கள் வழிபடுவதற்குத் திறந்துவிட்டது தொடங்கி அம்மசூதியை ஆர்.எஸ்.எஸ். கும்பல் இடித்துத் தள்ளுவதற்குப் பாதுகாப்பு கொடுத்தது வரை இப்பிரச்சினையில் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இளைய பங்காளியாக காங்கிரசு நடந்து கொண்டதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. பாபர்மசூதி இடிப்பு வழக்கை விசாரித்துவரும் சி.பி.ஐ., கோப்ராபோஸ்ட் காணொளியில் வெளியாகியிருக்கும் ஆதாரங்களைச் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத் தக்க சாட்சியங்களாகப் பயன்படுத்த முடியாது எனக் கூறி நிராகரித்திருப்பதிலிருந்தே காங்கிரசின் மனவோட்டத்தைப் புரிந்துகொண்டுவிடலாம்.

காங்கிரசு உள்ளிட்டுத் தம்மை மதச்சார்பற்றவர்களாகக் கூறிக்கொண்டு திரியும் ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் முசுலீம் வாக்குகளைப் பொறுக்கித்தின்னும் நோக்கத்தோடு மட்டும்தான் தம்மை மதச்சார்பற்ற கட்சிகளாக முன்னிறுத்திக் கொள்ளுகின்றனவே தவிர, அந்த வரம்பைத் தாண்டி இந்து மதவெறி பாசிசத்தை எதிர்ப்ப



இந்து மதவெறிக் கும்பல் பாபர் மசூதி இடிப்புக்கு முன் நடத்திய பாகல்பூர் கலவரம் (இடது);
மசூதி இடிப்புக்குப் பின் நடத்திய மும்பய்க் கலவரத்தின் கோரக் காட்சிகள். (கோப்புப் படங்கள்)

தில் அவை அக்கறையும் கொண்டதில்லை; நேர்மையாகவும் நடந்து கொண்டதுமில்லை. பாபர் மசூதி இடிப்பு, பாகல்பூர் கலவரம், மும்பய்க் கலவரம், குஜராத் படுகொலை ஆகிய பயங்கரவாத குற்றங்களில் தொடர்புடைய அத்வானி, மோடி உள்ளிட்ட இந்து மதவெறியர்களைத் தண்டிக்கக் கோரி இக்கட்சிகள் ஒருதுரும்பைக் கூடத் தூக்கிப் போட்டது கிடையாது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தீஸ்தா சேதல்வாத், முகுல் சின்ஹா உள்ளிட்ட சில தனிப்பட்ட நபர்கள் விடாப்பிடியாக நடத்திவரும் சட்டரீதியான போராட்டம் காரணமாகத் தான் ஓரிரு குஜராத் படுகொலை வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

பா.ஜ.க.வின் இந்து மதவெறி பயங்கரவாதக் குற்றங்கள் மட்டுமல்ல, மோடியின் தனிப்பட்ட குற்றங்களைக் கூட - மாதுரி என்ற புனைபெயர் கொண்ட இளம் பெண்ணை போலீசை ஏவிவிட்டுக் கண்காணித்தது, தன்னைக் கல்யாணமாகாத பிரம்மச்சாரி போலக் காட்டிக் கொண்டு ஏய்த்து வந்தது - அம்பலப்படுத்தி இந்து மதவெறி பாசிச கும்பலைத் தனிமைப்படுத்துவதற்கு இம் 'மதச்சார்பற்ற' கட்சிகள் எவ்வித முனைப்பையும் காட்டவில்லை. குஜராத் போலீசு துறையின் தீவிரவாத எதிர்ப்புப் படையைச் சேர்ந்த போலீசார் மாதுரி என்ற இளம்பெண்ணை அவரது படுக்கையறை வரை கண்காணித்த, அவரது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்ட விவகாரத்தை எடுத்துக் கொண்டால், அதுவொரு மர்மப்படம் போலத் திகிலூட்டக்கூடியதாக, பல கிளைக் கதைகளைக் கொண்டதாக விரிவடைவதோடு, மோடி என்ற தனிப்பட்ட மனிதனின் தீக்குணங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தபோதும், அவ்விவகாரம் ஆங்கிலப் பத்திரிகைகளில் சில நாள் விவாதிக்கப்பட்டதைத் தாண்டி வேறெந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.

தான் திருமணமானவன் என்பதை ஒருபுறம் மறைத்துக்கொண்டு, மற்றொருபுறம் மாதுரி என்ற இளம் பெண்ணோடு சந்தேகத்திற்குரிய உறவைப் பேணி வந்திருக்கிறார், மோடி. சொந்த மனைவியை யாரும் தொடர்பு கொண்டுவிடக் கூடாது என்பதற்காக அவர் (யசோதா பென்) கட்டுக்காவலையொத்த நிலையில் வைக்கப்படுகிறார். மாதுரி விவகாரம் வெளியே தெரியக் கூடாது என்பதற்காக தீவிரவாத எதிர்ப்பு போலீசைக் கொண்டு அவர் கண்காணிக்கப்பட்டார். இந்த வேவு விவகாரத்தை அமுக்கிப் போட்டு, மோடியைப் பரிசுத்த மானவராகக் காட்ட கீழ்த்தரமான கட்டுக் கதையும் அவ தூறும் அவிழ்த்துவிடப்பட்டது.

நேர்மையானவராக, அப்பழுக்கற்றவராக காட்டப்படும் மோடியின் அந்தரங்க வாழ்வு, மன்னர்களின் அந்தப்புர வாழ்க்கையைப் போல மர்மங்கள் நிறைந்ததாக உள்ளது. அவரது பொதுவாழ்வோ படுகொலைகளால் நிரம்பி வழிகிறது. குஜராத் படுகொலையில் மோடிக்கும் அவரது அரசிற்கும் உள்ள தொடர்பை அம்பலப்படுத்தி போலீசு அதிகாரிகள் சஞ்சீவ் பட், ராகுல் சர்மா, சிறீகுமார் மற்றும் ஜாகியா ஜாஃப்ரி ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். முசுலீம் தீவிரவாதிகளை எதிர்த்து நிற்கும் வலிமையான தலைவர் என மோடிக்கு பில்ட்-அப் கொடுப்பதற்காகவே சோராபுதீன், இஷ்ரத் ஜஹான் உள்ளிட்டு பல போலிமோதல் படுகொலைகள் குஜராத்தில் நடத்தப்பட்டிருப்பதை உச்சநீதிமன்ற, குஜராத் உயர்நீதிமன்ற விசாரணைகள் அம்பலப்படுத்தியுள்ளன.

பாபர் மசூதி இடிப்புச் சதியில் அத்வானி உள்ளிட்ட தலைவர்களுக்கு உள்ள தொடர்பை லிபரான் கமிசன் அம்பலப்படுத்தியிருக்கிறது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த மும்பய் கலவரத்தை பா.ஜ.க. - சிவசேனா இந்து மதவெறிக் கும்பல்தான் தூண்டிவிட்டு நடத்தியது என்பதை சிறீகிருஷ்ணா கமிசன் நிறுவியிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் வட இந்தியாவின் பல்வேறு இடங்களில் குண்டு வெடிப்புகள் நடத்தியிருப்பதை ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த அசீமானந்தாவின் வாக்குமூலம் அம்பலப்படுத்தியிருக்கிறது. இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு எதிராக இத்துணை சாட்சியங்கள், ஆதாரங்கள் இருந்தும், அவர்களைத் தண்டிப்பதற்கும் அரசியல் அரங்கிலிருந்து அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் இவை பயன்படுத்தப்படாமல் கரையான் அரிக்க விடப்பட்டிருப்பது தான் நமது காலத்தின் கொடுந்துயராகும்.

● திப்பு

# “தேர்தல் அரசியல் அணுஉலையை மூடாது! மக்கள் போராட்டமே தீர்வு!!”

## – கூடங்குளத்தில் நடத்தப்பட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கருத்தரங்கம்

கடந்த ஓராண்டுக்கும் மேலாக கூடங்குளம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கூடங்குளம் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் மீது தேசத்துரோக வழக்கு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் பொய்வழக்குகள் பதிவு செய்யப்பட்டு போலீசின் அச்சுறுத்தலுக்குள் மக்கள் இருத்தப்பட்டிருப்பது; கூடங்குளம் அணுஉலைக்கெதிரான போராட்டக் கமிட்டியைச் சேர்ந்த சுப.உதயகுமாரன், ஜேசுராஜன் உள்ளிட்டோர் நாடாளுமன்ற அரசியல் மூலமாக அணு உலையைத் தடுத்து நிறுத்தப் போவதாக அறிவித்து, ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளராகக் களமிறங்கியிருப்பது என்ற சூழலில், ‘‘தேர்தல் அரசியல் அணுஉலையை மூடாது! மக்கள் போராட்டமே தீர்வு!’’ என்ற முழக்கத்தின் கீழ் கடந்த ஏப்ரல் 14 அன்று கூடங்குளத்தில் கருத்தரங்கமொன்றை நடத்தியது, மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.

‘‘அரங்கில் கூட்டம் நடத்துவதற்கு போலீசின் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்ற போதிலும், இக்கூட்டத்தை நடத்தவிடாமல் தடுப்பதற்கு போலீசும் நீதிமன்றமும் சட்டவிரோதமான முறையிலும் மிகவும் கீழ்த்தரமான முறையிலும் நடந்து கொண்டதை’’த் தனது தலைமையுரையில் அம்பலப்படுத்தினார், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டத் துணைச் செயலர் வழக்குரைஞர் வாஞ்சிநாதன்.

இதனைத் தொடர்ந்து பேசிய இடிந்தகரை பகுதியைச் சேர்ந்த கவுன்சிலர் புனிதா, ‘‘போராட்டத்தின் பொழுது, மாவட்ட ஆட்சியர் கொடுத்திருந்த வாக்குறுதியை மீறி, சதித்தனமான முறையில் கூடங்குளம் அணுஉலையின் 3 மற்றும் 4 பிரிவுகளையும் நிறுவுவதற்கான ஒப்பந்தம் போடப்பட்டிருப்பதை’’ச் சுட்டிக்காட்டியதோடு, ‘‘அரசு அதிகாரிகளையும், ஓட்டுச்சீட்டு அரசியல்வாதிகளையும் நம்பிப் பயனில்லை; அனைத்துப்பிரிவு மக்களையும் ஒருங்கிணைத்து போராட்டங்களை முன்னெடுப்பதொன்றே தீர்வாக அமையும்’’ என்றார்.

‘‘குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவதைப் போல, இடிந்தகரையிலேயே முடங்கிவிட்ட போராட்டத்தை நாடெங்கிலும் விரிவுப்படுத்த வேண்டும்’’ என்றார், உவரி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.வி.அந்தோனி.

கூடங்குளம் கடற்கரை முற்றுகைப் போராட்டம் உள்ளிட்டு கூடங்குளம் பகுதி மக்கள் நடத்திய பல்வேறு போராட்டங்களில் ம.உ.பா.மையம் மற்றும் புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றதை நினைவு கூர்ந்த கூடங்குளம் வெங்கடாசலபதி, ‘‘தேர்தல் கட்சிகள் அனைத்தும் மக்கள் விரோதமானவை; அவர்கள் பங்கேற்கும் தேர்தலைப் புறக்கணிப்போம்’’ என்றார்.

‘‘பல இலட்சம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கும் வழக்குரைஞர்கள் மத்தியில், உழைக்கும் மக்கள் போராடும் இடங்களிலெல்லாம் சென்று குரல் கொடுக்கும் ம.உ.பா.மையத் தோழர்களுடன் இணைந்து நம்பிக்கையுடன் போராடுவோம்’’ என்றார் நெல்லை மாவட்ட மீனவர் கூட்டமைப்புத் தலைவர் ஜோசப்.

இறுதியாக பேசிய ம.உ.பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு, ‘‘அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கி ஆம்ஆத்மி கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர்கள் உள்ளிட்டு கட்சித் தலைவர்கள் பலரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நடத்துபவர்கள்; ஏகாதிபத்தியங்களிடம் காசு வாங்குபவர்கள்; மக்கள் போராட்டங்களை முனைமழுங்கச் செய்வதொன்றுதான் இத்தொண்டு நிறுவனங்களின் முக்கியப் பணி’’ என்பதை அம்பலப்படுத்திய அவர், ‘‘அணுஉலை குறித்து இதுவரை தெளிவான முடிவெடுக்காத ஆம் ஆத்மி கட்சியை வைத்துக்கொண்டு எவ்வாறு அணு உலைத் திட்டத்தை தடுத்து நிறுத்தப் போகிறார், சுப.உதயகுமாரன்?’’ என்ற கேள்வியெழுப்பினார்.




தஞ்சை டெல்டா விவசாயிகளின் மீத்தேன் வாயுத் திட்ட எதிர்ப்புப் போராட்டம்; திருவண்ணாமலை ஜிண்டால் எதிர்ப்புப் போராட்டம்; சேலம்-ஈரோடு கெயில் நிறுவன எதிர்ப்புப் போராட்டம்; தாதுமணல் - அணுஉலைக்கு எதிரான கடலோர மக்களின் போராட்டங்கள் ஒருமுகப் படுத்தப்பட வேண்டும்; இத்தகைய மக்கள் போராட்டங்கள் தான் அரசை அடிபணிய செய்யும்; தேர்தலில் பங்கேற்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்ற செய்தியை கூடங்குளம் பகுதி கிராம மக்களிடையே பதிவு செய்தது, இக்கருத்தரங்கம்.

– பு.ஜ.செய்தியாளர், திருநெல்வேலி.

## ஆம் ஆத்மி:

# சிறப்பு இரகசியம்!

**அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊட்டி வளர்த்துள்ள அரசுசாரா நிறுவனங்களின், குடிமை சமூகங்களின் கூட்டணிதான் ஆம் ஆத்மி கட்சி, லோக் சத்தா கட்சி, இன்னபிற அமைப்புகள்.**

அரசியலையும் வரலாற்றையும் ஆழமாகப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு ஆம் ஆத்மி கட்சியின் திடீர்த் தோற்றமும் தேர்தல் வெற்றியும் அதிசயக்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. ஆம் ஆத்மி கட்சியின் பின்னணியைப் புரிந்து கொள்ளாத பல அரசியல் விமர்சகர்கள் எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டிலும் என்.டி.ஆர். ஆந்திரத்திலும் திடீரென்று அரசியல் கட்சிகளைத் தொடங்கி, குறுகிய காலத்திலேயே - 16 மாதங்களிலேயே ஆட்சியைப் பிடித்ததை ஆம் ஆத்மி கட்சியின் ‘‘சாதனை’’யோடு ஒப்பிடுகிறார்கள்.

ஆனால், பலரும் காணத் தவறிய, ஒரு உண்மை உண்டு. ஆம் ஆத்மி கட்சியும் காங்கிரசு கட்சியும் அந்நிய சக்திகளின் தூண்டுதலினால், ஒரே காரணத்தால், ஒரே வகையான வரலாற்றுப் பின்னணியில் தோற்றமெடுத்தவை என்பது மறுக்க முடியாது. இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சி 1885 - ஆம் ஆண்டு டிசம்பரில், ஆங்கிலேயக் காலனிய ஆட்சியில் விவசாயம் மற்றும் வருவாய்த்துறை செயலராக இருந்த ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்ற வெள்ளை அதிகாரியின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராகக் குமுறிக்கொண்டிருந்த இந்திய மக்கள் கொந்தளிப்பில் இருப்பதாக, உளவுத்துறையின் ஏழு தொகுப்பு இரகசிய அறிக்கைகள் ஹ்யூமிடம் கையளிக்கப்பட்டு, அதைக் காப்பதற்கான வடிகாலாகத்தான் இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியை ஆங்கிலேயர்கள் தோற்றுவித்தார்கள் என்பது இப்போது பலரும் ஏற்றுக் கொள்ளும் வரலாற்று உண்மை.

இப்போது இந்திய மக்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் கொந்தளித்து வெடிப்பதற்கான தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஓட்டுக் கட்சிகள், அரசியல்வாதிகள் மீது மட்டுமல்ல; செயலிழந்துவரும் அரசு, அதிகரித்துவரும் சட்டமீறல்கள், கொள்கைகளின் இடத்தில் வெறும் கவர்ச்சித் திட்டங்கள், அரசியல் கிரிமினல்மயமாதல், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஊழல், போலீசு அராஜகங்கள், நீதித்துறை ஊழல்கள், அதிகரித்துவரும் விதவிதமான கிரிமினல் குற்றங்கள், சமூகப் பாதுகாப்பின்மை என்று மொத்த அரசமைப்பும், சமூகமும் பாரதூரமான நெருக்கடியில் சிக்கி நொறுங்கிச் சரிந்து வருகின்றது என்பதுடன், பலவிதமான முயற்சிகளுக்குப் பின்னரும் அதனை முட்டுக் கொடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்த நிலையில்தான் அமெரிக்காவின் ஃபோர்டு ஃபவுண்டேசன் நிறுவனத்தின் நிதியளிப்பில் இயங்கி வரும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை நடத்தும் அரவிந்த் கேஜரிவால், மனிஷ் சிசோதியா, யோகேந்திர யாதவ் முதலானவர்கள் ஆம் ஆத்மி கட்சியை 2012-ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள். பின்னாளில் நாடுமுழுவதும் உள்ள இலட்சக்கணக்காண அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் - இப்போது அவர்கள் குடிமைச் சமூகம் என்று தமக்குப் பெயர் சூட்டிக் கொண்டுள்ளனர் - இந்தக் கட்சியில் இணைந்துக் கொண்டுள்ளன.


இந்த விவரம் பலருக்கும் தெரிந்திருந்தாலும் ஆம் ஆத்மி கட்சியின் பூர்வீகம், அடிப்படை, நோக்கம், எதிர்கால இலட்சியம் போன்றவை அவர்களுக்குத் தெரியா. அரசியல் கட்சிகள் தமது அரசியல் நோக்கத்துக்காகவும் ஆதாயத்துக்காகவும் எதிராளிகள் மீது ‘‘அந்நிய (குறிப்பாக அமெரிக்க) நிதி உதவி பெறும் அரசுசாரா

‘‘சிந்தனைக் குழாம்கள்-குடிமை சமூகங்கள் நிறுவனங்களின் திட்ட’’த்தின் (TTCSP) சின்னம்.

TTCSP
THINK TANKS AND CIVIL SOCIETIES PROGRAM
UNIVERSITY OF PENNSYLVANIA

தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு-சதி'' என்ற குற்றச்சாட்டைப் பயன்படுத்தி வருகின்றன. அது ஒருபுறமிருக்க, உலக மயமாக்கமும் மறுகாலனியாதிக்கமும் ஏகாதிபத்தியத்தால் திணிக்கப்பட்டதில் இருந்து நமது நாட்டின் அரசியல் அமைப்பில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு அதிகாரபூர்வமாகவே அதிகரித்து வந்திருக்கிறது.

மறுகாலனியாக்க கொள்கைகள் அமலாகத் தொடங்கிய காலம் முதல், மாவட்ட, வட்ட ஆட்சியர் அலுவலகங்களின் மக்கள் நலப்பணிகள் திட்டமிடுதல்களில், அமலாக்கங்களில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டன. அந்த மட்டங்களில் இருந்து பிரதமர், அமைச்சகங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது வரை அவற்றுக்கு அரசுடன் கலந்துறவாட இடமளிக்கப்பட்டது. அரசு அமைப்பில் உயரதிகாரிகளாக இருந்து கொண்டே, அந்நிய, குறிப்பாக அமெரிக்க நிதி உதவி பெறும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களைத் தலைமை தாங்கி நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அவற்றுக்கு அரசே நிதியளிக்கவும் செய்தது.



குடிமை சமூகம் முதல் இதழில் - 2003 செப்டம்பரில் அரவிந்த் கேஜரிவால் குறித்த அட்டைப்படக் கட்டுரை (இடது); மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் அரசியலில் ஈடுபடுவதைக் குறித்து விவாதம் நடப்பதாக அட்டைக் கட்டுரை இடம் பெற்ற குடிமை சமூகம் 2003 நவம்பர் இதழ்.

இந்த மாற்றத்துக்கு என்ன காரணம்? ஏகாதிபத்திய உலகமயமாக்கம் திணித்த புதிய தாராளமயப் பொருளாதாரக் கொள்கை, அரசியல் கட்டுமானச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகத்தான் இந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. ''இனி நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, மருத்துவம்-சுகாதாரம், கல்வி-பண்பாடு உட்பட அனைத்துத் துறைகளிலும் சட்ட திட்டங்கள் எதுவானாலும், அரசின் முறைசார்ந்த அமைப்புகள் மட்டும் தீர்மானிப்பதாகவும் செயல்படுத்துவதாகவும் இருக்கக் கூடாது. அப்படியான சட்ட திட்டங்கள் மக்களுக்கு ஏற்புடையவைதானா என்று அறியவும் அல்லது மாற்றுக்களைப் பரிந்துரைக்கவும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகளும் சேர்ந்துதான் தீர்மானிக்கவேண்டும்'' என்பது கடந்த 25 ஆண்டுகளாக இந்திய அரசு - அது எதுவானாலும் - அமலாக்கிவரும் புதிய பொருளாதார, புதிய கட்டுமானச் சீரமைப்பின் முக்கியமான கூறு ஆகும். அரசின் முறைசார்ந்த அமைப்புகளான தேர்தல் அரசியல் கட்சிகள், அதிகார வர்க்கத்தினர் முதலானவர்களின் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றச்செயல்கள் காரணமாக அவற்றின்மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு, அவநம்பிக்கை ஆகியவை இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இது, மேற்பார்வைக்கு மிகவும் ஜனநாயகபூர்வமான தாகத் தோன்றும். இதைத்தான் 'அடிமட்ட/ வேர்வரையிலான ஜனநாயகம் (grassroot democracy); மக்களுக்கு அதிகாரத்தைக் கொண்டு சேர்ப்பது (Empowerment of people)' என்கிறார்கள். இது உண்மையில் ஒரு மாபெரும் சதி/தந்திரம். அரசுத்துறை, பொதுத்துறைத் தொழில்கள், நிறுவனங்கள் திறமையான நிர்வாகம், முன்முயற்சி, அக்கறை, பொறுப்பு இல்லாததால்தான் நட்டமடைந்து, நலிந்து போய்விட்டன; அவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்தால் அவர்களின் திறமையான நிர்வாகம், முன்முயற்சி, அக்கறை, பொறுப்பு காரணமாக தொழிலும் பொருளாதாரமும் செழித்து வளரும் என்று சொல்லித்தான் அவற்றை கார்ப்பரேட் தரகு முதலாளிகள் கைப்பற்றிக் கொண்டு, பொதுச் சொத்தைச் சூறையாடினர்.

**உலகமயமாக்கமும் மறுகாலனியாதிக்கமும் ஏகாதிபத்தியத்தால் திணிக்கப்பட்டதில் இருந்து நமது நாட்டின் அரசியல் அமைப்பில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு அதிகாரபூர்வமாகவே அதிகரித்து வந்திருக்கிறது. அரசு அமைப்பில் உயரதிகாரிகளாக இருந்து கொண்டே, அந்நிய, குறிப்பாக அமெரிக்க நிதி உதவி பெறும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களைத் தலைமை தாங்கி நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.**

அதேசமயம், அரசின் முறைசார்ந்த அமைப்புகளின் மிக முக்கிய அங்கமாகவும் ஊழலின் ஊற்றுக் கண்ணாகவும் இருக்கும் அதிகார வர்க்கத்தைக் கட்டுமானச் சீரமைப்பு ஒழிப்பதில்லை. மாறாக, அதற்கு

மேலும் அதிகாரம் கொடுக்கச் சொல்லுகிறது. ஓய்வு பெற்ற அதிகார வர்க்க நபர்கள் ஒழுங்குமுறை ஆணையங்கள், சிறப்பு ஆலோசகர்கள், நிபுணர் குழுக்கள் என்ற பெயரில் சட்டமன்றங்கள், நாடாளுமன்றத்துக்கு மேல் நிறுத்தப்படுகிறார்கள். மேலும், பல முன்னாள் அரசு அதிகாரவர்க்கத்தினர் தரகு முதலாளிகளின், பன்னாட்டுத் தொழிற்கழகங்களின் கார்ப்பரேட் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளாகவும், ஆலோசகர்களாகவும் பதவியளிக்கப்படுகிறார்கள். இவ்வாறு ஓய்வுபெற்ற பிறகும் அரசுக்குள்ளும் வெளியிலும் இருந்து கார்ப்பரேட் தரகு முதலாளிகள் மற்றும் ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஊழியம் செய்து, எல்லா இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்குமான ஊடகமாகச்செயல்படுகிறார்கள். தூய்மையான அரசு நிர்வாகத்துக்காகப் 'மாபெரும்' போராட்டங்கள் நடத்தும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களும் அவற்றை உள்ளடக்கிய குடிமைச்சமூக அமைப்புகளும் இதைக் கண்டுகொள்வதில்லை. காரணம், மேட்டுக்குடி வர்க்க சகோதர பாசம்தான்.

இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு எதிராகத் தூய்மையான அரசு நிர்வாகத்துக்காகப் 'மாபெரும்' போராட்டங்கள் நடத்தும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களையும் அவற்றை உள்ளடக்கிய குடிமைச்சமூக அமைப்புகளையும் நடத்திவரும் அதே நபர்கள்தாம், நாட்டின் தற்போதைய எல்லா அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கேடுகளுக்கும் காரணமாகவுள்ள புதிய பொருளாதார, புதிய கட்டுமானச்சீரமைப்புக் கொள்கைகளை அரசுக்குள்ளும் வெளியிலும் இருந்து வகுத்து அமலாக்குகிறார்கள்.

மத்திய, மாநில அரசுகளின் அரசியல், பொருளாதாரம், சமூக, மருத்துவம்-சுகாதாரம், கல்வி-பண்பாடு உட்பட அனைத்து அரசுத் துறைகளிலும் ''கொள்கை'' முடிவெடுக்கவும் ''திட்டங்கள்'' வகுக்கவும் பொறுப்பேற்கும் மந்திரிகளில் ஏறக்குறைய எவருக்குமே அந்தத் ''தகுதி'' கிடையாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தக் காலியிடத்தை நிரப்புவதுடன், இந்த உண்மையை இப்போது அப்பட்டமாகவே ஒப்புக்கொள்ளும் வகையில் உருவாகியிருக்கின்றன, சிந்தனைக் குழாம்கள் (''திங்க் டாங்க்ஸ்'') என்ற ஏற்பாடுகள். அதாவது, ஆலோசனை வியாபாரிகள். ஒரு சிந்தனைக் குழாம்(அல்லது ஒரு கொள்கை வகுப்புக் கழகம், ஆய்வுக் கழகம் மற்றும் பிற) என்பது சமூகக் கொள்கைகள், அரசியல் போர்த்தந்திரம், பொருளாதாரம், இராணுவம், தொழில்நுட்பம், பண்பாடு முதலான துறைகளில் ஆய்வுகளையும் பரிந்துரைகளையும் செய்யும் ஒரு அமைப்பாகும். அரசுக்கும், தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் தேவையான ஆய்வுகளும், ஆலோசனைகளும் கட்டணம் பெற்றுக்கொண்டு வழங்கும் சேவை நிறுவனங்கள்.



குடிமை சமூகங்களின் மையத்தை நடத்தும் பார்த்தா ஜெ.ஷா, அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றவர்.

ரக்ஷக் ஃபவுண்டேசன், விவேகனந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன், இந்தியன் கவுன்சில் ஆன் குளோபல் ரிலேஷன்ஸ் போன்றவை இந்தியாவிலுள்ள சிந்தனைக் குழாம்களில் சில. மொத்தம் 269 சிந்தனைக் குழாம்களைக் கொண்டுள்ள நமது நாடு, அவற்றின் எண்ணிக்கையில் உலகிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்திய அரசின் அயலுறவுத்துறை, போலீசு, இராணுவத்துறை, பல்கலைக்கழகக் கல்வி, உணவுப் பதனிடும் திட்டங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள், சட்டச் சீர்திருத்தங்கள், தொழிலுறவு, அரசு நிர்வாகச் சீர்திருத்தங்கள், அவற்றைக் கணினிமயமாக்கம்-நவீனமயமாக்கம் செய்தல் - இப்படிப் பன்முகப் பணிகளில் இந்தச் சிந்தனைக் குழாம்கள் ஈடுபடுகின்றன.

இந்தப் பன்முகப் பணிகளில் சிந்தனைக் குழாம்கள் எப்போதும் தனித்துச் செயல்படுவதில்லை. சிந்தனைக் குழாம்களும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமை சமூக அமைப்புகளும் சேர்ந்துதான் செயல்படுகின்றன. சிந்தனைக் குழாம்களுக்குத் தேவையான கள ஆய்வுகள் செய்வது, தகவல்களைத் திரட்டித் தருவது, அவை பரிந்துரைக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசை ஏற்கச்செய்யும், அழுத்தம் கொடுக்கும் இயக்கங்களைக் கட்டமைப்பது, அவற்றின் அமலாக்கத்தில் பங்கேற்பது மற்றும் அந்த அடிப்படையிலான அரசின் சட்டதிட்டங்கள் மக்களுக்கு ஏற்புடையவைதானா, இல்லையென்றால் மாற்றுக்களைப் பரிந்

**இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு எதிராகத் தூய்மையான அரசு நிர்வாகத்துக்காகப் 'மாபெரும்' போராட்டங்கள் நடத்தும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களையும் அவற்றை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகளையும் நடத்திவரும் அதே நபர்கள்தாம், நாட்டின் தற்போதைய எல்லா அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கேடுகளுக்கும் காரணமாகவுள்ள புதிய பொருளாதார, புதிய கட்டுமானச் சீரமைப்புக் கொள்கைகளை அரசுக்குள்ளும் வெளியிலும் இருந்து வகுத்து அமலாக்குகிறார்கள்.**

*அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்கள் நேரடியாக அரசியலில் ஈடுபட வேண்டுமா, கூடாதா என்பது குறித்து 2000 -ஆம் ஆண்டில் இருந்தே சிந்தனைக்குழாம்களின் மத்தியில் விவாதங்களும் ஆய்வுகளும் நடந்து வந்தன. இந்த விவாதங்கள், ஆய்வுகளில் பிறந்தவைதாம் ஆந்திராவில் லோக்சத்தா கட்சியும் தில்லியில் ஆம் ஆத்மி கட்சியும். பலரும் எண்ணுவதைப் போல அன்னா ஹசாரே தலைமையிலான ''ஊழல் எதிர்ப்பு இந்தியா'' இயக்கம் பிளவுபட்டு அரவிந்த் கேஜரிவால் கும்பல் திடீரென்று உருவாக்கியதல்ல, ஆம் ஆத்மி கட்சி.*

துரைப்பது என்று பலவாறு அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகளும் சேர்ந்துதான் இயங்குகின்றன.

சிந்தனைக் குழாம்கள் மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகள் பற்றி இங்கே, இதுவரை சொல்லப்பட்டிருப்பவை எதுவும் ஆதாரமற்ற, கற்பனையான கோட்பாடுகள் அல்ல. அவை ஆதாரபூர்வமானவைதாம். ''சிந்தனைக் குழாம்கள் -குடிமைச் சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம்'' (TTCSP) என்ற இணையத்தளத்தில் பின்வரும் செய்தி கூறப்பட்டிருக்கிறது:

''உலகம் முழுவதுமுள்ள அரசாங்கங்கள் மற்றும் குடிமைச் சமூகங்கள் மீது கொள்கை நிறுவனங்கள் எவ்வாறு பங்காற்றுகின்றன என்பது பற்றி அமெரிக்கப் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் திட்டத்தின் கீழ் 'சிந்தனைக் குழாம்கள்-குடிமைச் சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம்' (TTCSP) ஆய்வுகள் நடத்துகிறது. அமெரிக்காவின் ஃபிலடெல்பியாவில் உள்ள அயலுறவுக் கொள்கை ஆய்வகத்தில் 1989-ஆம் ஆண்டு 'சிந்தனைக் குழாம்கள்-குடிமைச் சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம்' (TTCSP) அமைக்கப்பட்டது; அது, 2008-ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் திட்டத்துக்கு மாற்றப்பட்டது. பெரும்பாலும் சிந்தனைக் குழாம்கள் (திங்க் டாங்க்ஸ்) என்று சொல்லப்படும் ''சிந்தனைக் குழாம்கள் -குடிமை சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம் (TTCSP)'' பொதுத் துறைகளின் கொள்கை ஆய்வு அமைப்புகளுடைய பரிணாம வளர்ச்சி மற்றும் பங்கு பாத்திரத்தைப் பரிசீலிக்கின்றது. சர்வதேச அமைதி - பாதுகாப்பு, உலகமயமாக்கம்-ஆட்சி நிர்வாகம், சர்வதேசப் பெருமாதாரங்கள், சுற்றுச் சூழல், சமூகம் - தகவல், வறுமைக் குறைப்பு மற்றும் சுகாதாரம் போன்றவற்றின் பாரிய கொள்கைத் தளங்களுக்கும் திட்டங்கள் - கொள்கைகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பி ஒரு உலக முன்முயற்சிக்கான அடித்தளமிடுவதைக் கடந்த 20 ஆண்டுகளாக சிந்தனைக் குழாம்களும் மற்றும் குடிமை சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம் (TTCSP) கட்டமைத்து வருகிறது. இந்தச் சர்வதேசக் கூட்டுறவு முயற்சி பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான கொள்கை நிறுவனங்கள் மற்றும் சமூகங்கள் அடங்கிய ஒரு வலைப்பின்னலை நிறுவும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது; அந்த வலைப்பின்னல் உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக நிறுவனங்கள், சமூகங்களின் கொள்கை உருவாக்கத்தை முன்னேற்றி அவற்றுக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்தும்''.

ஆம் ஆத்மி கட்சியைப் போலவே அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் லோக்சத்தா கட்சியை நிறுவிய முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஜெயபிரகாஷ் நாராயணன்.



அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் ஏழாண்டுகள் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றிவிட்டு, இந்தியாவின் பொருளாதார, சமூக, அரசியல் சுதந்திரத்துக்காக இரண்டாவது விடுதலை இயக்கம் நடத்தப் போவதாகக் கூறிக்கொண்டு 1997-இல் நாடு திரும்பினார், குஜராத்தைச் சேர்ந்த பார்த்தா ஜெ. ஷா. அவர் இப்போது தில்லியில் ''குடிமைச் சமூகங்கள் மையம்'' என்ற பெயரில் ஒரு சிந்தனைக் குழாமை நடத்தி வருகிறார். அது இந்திய மற்றும் குஜராத் அரசுகளுக்காக பல துறைகளில் பணியாற்றுகிறது. அது, பென்சில்வேனியா பல்கலைக்கழகச் சிந்தனைக் குழாம்கள்-குடிமை சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம் (TTCSP) 2012-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி உலகிலேயே 55-வது இடத்தில் இருக்கிறது. இப்படிப் பல பார்த்தா ஜெ.ஷாக்கள் அமெரிக்கா மற்றும் மேலைநாடுகளில் இருந்து கடந்த 10, 15 ஆண்டுளில் இந்தியா வந்திறங்கினார்கள்.

அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்கள் நேரடியாக அரசியலில் ஈடுபட வேண்டுமா, கூடாதா என்பது குறித்து 2000 -ஆம் ஆண்டில் இருந்தே சிந்தனைக்குழாம்களின் மத்தியில் விவாதங்களும் ஆய்வுகளும் நடந்து வந்தன. இந்த விவாதங்கள், ஆய்வுகளில் பிறந்தவைதாம் ஆந்திராவில் லோக்சத்தா கட்சியும் தில்லியில் ஆம் ஆத்மி கட்சியும். பலரும் எண்ணுவதைப்போல அன்னா ஹசாரே தலைமையிலான ''ஊழல் எதிர்ப்பு இந்தியா'' இயக்கம் பிளவுபட்டு அரவிந்த் கேஜரிவால் கும்பல் திடீரென்று உருவாக்கியதல்ல, ஆம் ஆத்மி கட்சி.

(தொடரும்)

## இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள்:

# இந்தியாவின் மீது பூட்டப்பட்ட பொன்விலங்கு!

**மறுகாலனியாதிக்கம் என்பது காலனியாதிக்கத்திற்கு எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல என்பதை நிரூபிக்கும் இன்னொரு சான்றுதான் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள்.**

அந்நிய முதலீடுகளைக் கவர்ந்திழுப்ப தொன்றுதான் நாட்டை முன்னேற்றுவதற்கு ஒரே வழி என்று ஆளும் வர்க்கமும் ஓட்டுக் கட்சிகளும் ஒரே குரலில் நெடுநாட்களாக கூவி வருகின்றனர். இருந்த போதிலும், அந்நிய முதலீட்டாளர்களுடன் அரசு போட்டுக்கொள்ளும் ஒப்பந்தங்கள் மட்டும் இராணுவ இரகசியத்தை விடப் பெரிய இரகசியமாக எல்லா அரசாங்கங்களாலும் பேணப்படுகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoU) உள்ள ஷரத்துக்கள் என்ன என்பது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்துக்கே இரகசியமாக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய இரகசியங்களைத் தோண்டித்துருவி, புலனாய்வு செய்துதான், டாடா, அதானி போன்ற நிறுவனங்களுக்குத் மோடி வழங்கியுள்ள சலுகைகள், நோக்கியாவுக்கு தமிழக அரசு வழங்கியுள்ள சலுகைகள், போஸ்கோவுக்கு ஒரிசா அரசு வழங்கியுள்ள சலுகைகள் போன்றவை குறித்த விவரங்களைப் பத்திரிகையாளர்களோ, ஆர்வலர்களோ வெளிக்கொண்டு வருகின்றனர். இவையெல்லாம் குறிப்பிட்ட கார்ப்பரேட் நிறுவனங்களுடன் அரசு போட்டுக்கொள்ளும் ஒப்பந்தங்கள் குறித்த நிலைமை.

இவையன்றி முதலீடு செய்யும் நிறுவனங்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவையோ அந்த நாடுகளின் அரசுகளுடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்களையும் (Bilateral Investment Treaties) இந்திய அரசு செய்து கொண்டிருக்கிறது. 2012-ஆம் ஆண்டு ஜூலை நிலவரப்படி, இந்தியா இதுவரை 73 நாடுகளுடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. மேலும் சுமார் 20 நாடுகளுடனான ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தை நிலையில் உள்ளன. நாடுகள் என்று அழைக்கப்படும் இவற்றில் பெரும்பாலானவை மொரிசியஸ், கேமேன் தீவுகள் போன்ற பன்னாட்டு முதலாளிகளின் பொம்மை அரசாங்கங்கள்.

இப்படி பிற நாடுகளுடன் போடப்படும் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் எதுவும் நாடாளுமன்றத்தின் பார்வைக்குக்கூட வருவது கிடையாது. இவை அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் மட்டத்தில் மிகவும் இரகசியமாகவே போடப்படுகின்றன. முரண்பாடுகள் தோன்றி பிரச்சனை சந்திக்கு வரும்போதுதான், இந்த ஒப்பந்தங்களின் அபாயகரமான உண்மை உருவம் தெரியத் தொடங்குகிறது. மறுகாலனியாக்கம் என்பது காலனியாதிக்கத்துக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பதை நிரூபிக்கும் எடுத்துக்காட்டுகள் இவை.

•••

2ஜி அலைக்கற்றை ஊழல் என்று அறியப்படும் கார்ப்பரேட் கொள்ளை நாடறிந்தவொரு பிரச்சனை. ''சட்டவிரோதமாகவும், தன்னிச்சையாகவும்'' 2ஜி உரிமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி 22 தொலைத் தொடர்பு நிறுவனங்களின் 122 உரிமங்களை ரத்து செய்வதாக பிப்.2012 - இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக, உரிமங்களை இழந்த நிறுவனங்களில் 'லூப் டெலிகாம்' என்ற நிறுவனமும் ஒன்று. 21 உரிமங்களை வைத்திருந்த இந்நிறுவனம், இத்தீர்ப்புக்குப் பின் பல்வேறு மாநிலங்களில் தான் வழங்கிவந்த செல்பேசி சேவைகளை நிறுத்த வேண்டியதாயிற்று. மேற்கூறிய 'லூப் டெலிகாம்' நிறுவனத்தின் 26 சதவீதப் பங்குகளை வைத்திருக்கும் மொரிசியஸ் நாட்டைச் சேர்ந்த, 'கேத்தான் ஹோல்டிங்ஸ் மொரிசியஸ் லிமிடெட்' என்ற நிறுவனம், இப்போது இந்திய அரசுக்கு எதிராக சர்வதேச தீர்ப்பாயத்தில் ஒரு வழக்கு தொடுத்துள்ளது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் விளைவாகத் தனக்கு நட்டம் ஏற்பட்டு விட்டதாகவும், அதனைச் சரிசெய்ய, தனக்கு இந்திய அரசு 1.4 பில்லியன் அமெரிக்க டாலர் (8700 கோடி ரூபாய்) நட்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் கேத்தான் ஹோல்டிங்ஸ் கோரியிருக்கிறது.

''முதலீட்டு அபிவிருத்தி, மற்றும் பாதுகாப்புக்கான இந்தியா - மொரிசியஸ் இருதரப்பு ஒப்பந்தத்தின்'' கீழ் இந்திய அரசிடம் இந்த இழப்பீட்டைக் கேட்கிறது இந்நிறுவனம்.



**''போட்ட மூலதனத்துக்குப் பாதுகாப்பு வேண்டும்'' என்ற நியாயமான நோக்கத்துக்காகத்தான் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் போடப்படுவதாக பன்னாட்டு நிறுவனங்கள் கூறுகின்றன. ஆனால் நாடாளுமன்றம், நீதித்துறை உள்ளிட்ட அரசின் இறையாண்மை, உள்நாட்டுத் தொழில்கள், இயற்கை வளம், சுற்றுச் சூழல் ஆகிய அனைத்துக்கும் பாதுகாப்பின்மையை உருவாக்குவதன் மூலம்தான் பன்னாட்டு மூலதனத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.**

இதேபோன்று, 2ஜி அலைக்கற்றை தீர்ப்பினால் தங்களது உரிமத்தை இழந்த ரசிய நிறுவனமான 'சிஸ்டமா'வும் வழக்கு தொடுத்துள்ளது. உரிமத்தை இழந்த இன்னொரு நிறுவனம் நார்வே நாட்டின் 'டெலிநார்'. டெலிநார் ஆசியா என்ற பெயரில் சிங்கப்பூரில் பதிவு செய்துள்ள தனது கிளை நிறுவனத்தின் மூலம் இந்தியாவில் முதலீடு செய்திருப்பதால், ''இந்திய - சிங்கப்பூர் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தந்தின்'' கீழ் 70,000 கோடி ரூபாய் இழப்பீடு கோரவிருப்பதாக டெலிநார் அறிவித்தது.

உடனே இந்திய அரசு டெலிநார் மற்றும் சிஸ்டமா தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அலைக்கற்றை மறுஏலத்தில் அவர்களுக்குப் போதுமான உரிமங்கள் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டதுடன் சமாதானப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது.

அலைக்கற்றை விவகாரத்தில் ''முறைகேடாக உரிமத்தைக் கொடுத்த குற்றத்துக்காக'' ஆ.ராசா உள்ளே வைக்கப்பட்டார். ஆனால், முறைகேடாக உரிமத்தை வாங்கிய நிறுவனங்களிடம் மண்டியிட்டு சரணடைந்திருக்கிறது இந்திய அரசு. அதாவது, ஊழல் உள்ளிட்ட எத்தகைய முறைகேடுகளில் ஈடுபட்டாலும், அந்நிய முதலீட்டாளருக்கு எதிராக இந்திய அரசோ, நீதிமன்றமோ நடவடிக்கை எடுக்க முடியாது என்பது மட்டுமல்ல; ஒரு நீதிமன்றத் தீர்ப்பு, பன்னாட்டு நிறுவனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பட்சத்தில் இதற்கான இழப்பீட்டையும் இந்திய அரசு செலுத்த வேண்டியிருக்கும் என்பதே இந்த இருதரப்பு ஒப்பந்தம் கூறும் உண்மை. சிங்கப்பூருடனான இந்த இருதரப்பு ஒப்பந்தத்தை 2003 மே மாதத்தில் வடிவமைத்தது வாஜ்பாயி அரசு; அதனை 2005-இல் இறுதியாக்கியது மன்மோகன் அரசு என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

•••

**வே**றொரு வழக்கில், ஆஸ்திரேலியாவுடன் இந்தியா போட்டிருக்கும் இருதரப்பு ஒப்பந்தத்தின்படி, நவம்பர் 2011-இல் சர்வதேசத் தீர்ப்பாயம் வழங்கியுள்ள தீர்ப்பு, நீதிமன்றத் தாமதத்திற்காக இந்திய அரசுக்கு அபராதம் விதித்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒயிட் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தை அரசுத்துறை நிறுவனமான கோல் இந்தியா நிறுவனம், ஒப்பந்த அடிப்படையில் ஜார்கண்டில் பிபாவார் எனுமிடத்தில் நிலக்கரிச் சுரங்கம் தோண்டும் பணிகளில் ஈடுபடுத்தியிருந்தது. ஒயிட் இன்டஸ்ட்ரீஸ் தரமற்ற கருவிகளைத் தலையில் கட்டியதால், தனக்கு நட்டம் ஏற்பட்டதாகக் கூறி, ஒயிட் இன்டஸ்ட்ரீஸ் அளித்திருந்த வங்கி உத்திரவாதத் தொகை 27 இலட்சம் டாலரை எடுத்துக் கொள்வதாக கோல் இந்தியா 1999-ஆம் ஆண்டு அறிவித்தது.

இதனை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்குகள் 2011-ஆம் ஆண்டு வரை முடியாத காரணத்தினால், அந்த ஆஸ்திரேலிய நிறுவனம் சர்வதேசதீர்ப்பாயத்துக்குச் சென்றது. இந்திய உச்சநீதிமன்றம் ஐந்து ஆண்டு காலத்திற்கு மேல் இவ்வழக்கில் நீதி வழங்காமல் இழுத்தடித்ததால், இந்திய அரசுதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்றும், ஒயிட் இன்டஸ்ட்ரீஸுக்கு ஒரு கோடி டாலர் நட்ட ஈடு அளிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்திருக்கிறது சர்வதேசத் தீர்ப்பாயம்.

உச்ச நீதிமன்றத்தை விமரிசித்து, அதற்கு அபராதமும் விதிக்க வகை செய்கின்ற விதத்தில் இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கிறதென்றால், இதனை இறையாண்மை கொண்ட நாடு என்று கூறிக்கொள்வது வெட்கக் கேடில்லையா?

•••

**இ**ருதரப்பு ஒப்பந்தம் என்ற பெயரிலான அடிமைச் சாசனம், நீதிமன்றத் தீர்ப்பை மட்டுமல்ல; இந்திய நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தையும் நேரடியாகவே கேள்விக்குள்ளாக்க முடியும் என்பதை வோடோபோன் நிறுவனம் நிரூபித்திருக்கிறது.

பன்னாட்டுத் தொலைதொடர்பு நிறுவனமான வோடாபோன், 2007-ஆம் ஆண்டு 'ஹட்ச்' நிறுவனத்தை வாங்கியதில் 11 ஆயிரம் கோடி ரூபாய் வரை

வரி ஏய்ப்பு மோசடி செய்தது. வருமான வரித்துறைக்கு எதிராக வோடபோன் நிறுவனம் தொடுத்த வழக்கில், ''வரியைக் கட்டத் தேவையில்லை'' என்று வோடோஃபோனுக்கு ஆதரவாக பிப்ரவரி 2012 - இல் தீர்ப்பளித்தது உச்ச நீதிமன்றம்.

''இந்த நீதிமன்றத் தீர்ப்பு மிகப்பெரும் அளவிலான வரி வருவாய் இழப்பை ஏற்படுத்தும் என்பதால், அதனைச் சமாளிக்கும் பொருட்டு, வரி தவிர்ப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான பொது விதிகளை (GAAR) அறிமுகம் செய்யவிருப்பதாக'' அன்றைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்தார். இந்தச் சட்டத் திருத்தத்தைத் தடுக்க பன்னாட்டு முதலாளிகளும் தரகு முதலாளிகளும் அரசுக்குக் கொடுத்த அழுத்தம் ஒருபுறமிருக்க, வோடாஃபோன் நிறுவனமோ, இரு தரப்பு ஒப்பந்தத்தின் பெயரால் இந்திய அரசை நேரடியாகவே எச்சரித்தது.

''பின்தேதியிட்டு அறிமுகப்படுத்தப்படும் இந்த சட்டத்திருத்தம், இந்தியா - நெதர்லாந்து இருதரப்பு ஒப்பந்தத்தின் ஷரத்துகளுக்கு எதிரானதாகையால், நாடாளுமன்றத்தில் இப்படியொரு சட்டத்திருத்தம் கொண்டு வரும் முடிவை இந்திய அரசு கைவிட வேண்டும். இல்லையென்றால் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவுக்கு எதிராக சர்வதேசத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுப்போம்'' என்று வோடாஃபோன் நிறுவனம் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டது. பிரணாப் முகர்ஜி கொண்டுவருவதாகக் கூறிய சட்டத் திருத்தம், நிரந்தரமாக சவக்குழிக்கு அனுப்பப்பட்டு விட்டது.

இந்தியாவில் தொழில் நடத்தி இலாபமீட்டும் ஒரு பன்னாட்டு நிறுவனம், இருதரப்பு ஒப்பந்தத்தின் பெயரால் இந்திய நாடாளுமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தையே ரத்து செய்ய முடியும் என்பதற்கு இது சான்று.

●●●

**இ**து மட்டுமல்ல, இரு தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அரசின் உள்நாட்டு கொள்கை முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்க முடியும் என டி.சி.ஐ. என்ற பிரிட்டனைச் சேர்ந்த ஹெட்ஜ் ஃபண்டு நிறுவனம் நிரூபித்து வருகிறது.

நம் நாட்டின் பெரும்பாலான நிலக்கரிச் சுரங்கங்களைத் தன் வசம் வைத்திருக்கும் கோல் இந்தியா என்ற பிரம்மாண்டமான பொதுத்துறை நிறுவனம், பொதுத்துறை அனல் மின் நிலையங்களுக்கு உலகச் சந்தை விலையைக் காட்டிலும் குறைவான விலைக்கு நிலக்கரியை விற்று வருகிறது. மின்சாரத்தின் விலையைக் கட்டுக்குள் வைக்கும் நோக்கத்தில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த விலைக்குறைப்பு முடிவை எதிர்க்கின்ற டி.சி.ஐ. நிறுவனம், உலகச் சந்தை விலைக்குத்தான் நிலக்கரியை விற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மின் உற்பத்திக்காக சந்தை விலையைவிடக் குறைவான விலைக்கு நிலக்கரியை விற்பதால், கோல் இந்தியா நிறுவனத்துக்கு ஆண்டுக்கு 2000 கோடி டாலர் வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும், ஒரு பங்குதாரர் என்ற முறையில் இந்த இழப்பு தன்னுடைய இலாபத்தை பாதிப்பதாகவும் டி.சி.ஐ. கூறுகிறது. இந்தியா-பிரிட்டன் மற்றும் இந்தியா-சைப்ரஸ் இருதரப்பு ஒப்பந்தங்களின் கீழ் முதலீட்டாளரான தனது நலனை இந்திய அரசின் முடிவுகள் பாதிப்பதால், இந்திய அரசுக்கு எதிராகச் சர்வதேசத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்போவதாகவும் அறிவித்திருக்கிறது.

அதாவது, நம் நாட்டில் கிடைக்கும் நிலக்கரியை, நம் நாட்டு அனல் மின் நிலையங்களுக்கு என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று ஒரு அயல்நாட்டு நிறுவனம் அரசுக்கு ஆணையிடுகிறது. ''காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி காயிதம் போட்டான் வெள்ளைக்காரன்'' என்ற கதைதான்! ஆனால், அன்று வெள்ளையனின் முழு அடிமையாக இந்தியா இருந்ததனால், அப்படி உத்தர விடுவதற்கான அதிகாரத்தை பிரிட்டன் பெற்றிருந்தது.

இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு ஒப்பந்தத்தை இறுதியாக்குவது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா. (கோப்புப் படம்)



இன்று கோல் இந்தியா நிறுவனத்தின் 90% பங்குகளை மத்திய அரசு வைத்திருக்கிறது. டி.சி.ஐ. என்ற பன்னாட்டு முதலீட்டு நிறுவனத்திடம் 1.1% பங்குகள் மட்டுமே உள்ளன. அதுவும் எவ்வித அவசியமுமின்றி, தனியார்மயக் கொள்கைகளின் கீழ் கட்டாயமாக விற்கப்பட்ட பங்குகளே இவை. இந்த ஒரு சதவீத பங்குகள் சாதாரண உள்நாட்டு முதலீட்டாளர்களிடம் இருக்கும்பட்சத்தில் ஒரு சதவீதத்தால் 90 சதவீதத்தை மிரட்டியிருக்க முடியாது. ஆனால், இந்த ஒரு சதவீத பங்குதாரர் ஒரு அந்நிய முதலீட்டாளர் என்பதால் தான், அரசை மிரட்ட முடிகிறது.

●●●

**இ**ரு தரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் என்று பெயரிடப்பட்டிருந்தாலும்,

உண்மையில் இவையனைத்தும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் என்ற ஒரு தரப்பைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தங்களே. 1994-க்குப் பின்னர்தான் இந்திய அரசு இத்தகைய ஒப்பந்தங்களைப் போடத் தொடங்கியது. காட் ஒப்பந்தம் என்பது எல்லா நாடுகளுக்குமான பொது விதி என்ற பெயரில் போடப்பட்டிருக்கும் ஒரு பல தரப்பு ஒப்பந்தம்.

சுதந்திர வர்த்தகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டிருக்கும் அந்த பல தரப்பு ஒப்பந்தமே பின்தங்கிய நாடுகளைச் சுரண்டும் விதத்தில்தான் ஏகாதிபத்திய நாடுகளால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பது பல்வேறு பிரச்சினைகளிலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், அந்த பல தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் பொதுவான நியாயத்தை எழுப்புவதற்கான வாய்ப்பையும் அடைத்து, பின்தங்கிய நாடுகளுக்குக் கிடுக்கிப்பிடி போடும் விதத்தில்தான் இந்த இருதரப்பு ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.




**நம் நாட்டில் கிடைக்கும் நிலக்கரியை, நம் நாட்டு அனல் மின் நிலையங்களுக்கு என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று ஒரு அயல் நாட்டு நிறுவனம் அரசுக்கு ஆணையிடுகிறது. ''காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி காயிதம் போட்டான் வெள்ளைக்காரன்'' என்ற கதைதான்!**

தற்போது தொடர்ச்சியாக சர்வதேசத் தீர்ப்பாயத்தில் அடுக்கடுக்காக பல வழக்குகள் தொடுக்கப்படுவதால் இந்திய அரசு புதிய இருதரப்பு ஒப்பந்தங்களை ஒத்தி வைத்துள்ளது. ஆனால், தற்போதைய நிலவரப்படியே சுமார் 3 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இந்திய அரசிடம் இழப்பீடு கோரும் பல வழக்குகள் சர்வதேசத் தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சர்வதேசத் தீர்ப்பாயம் என்பது சர்வதேச வணிகச் சட்டங்களுக்கான ஐ.நா. கமிசனுடைய விதிகளின்படி அமைக்கப்படும் மூவர் குழுவாகும். இக்குழுவின் உறுப்பினர்கள் பெரும்பாலும் பன்னாட்டு முதலாளிகளின் சட்ட ஆலோசகர்கள்தான்.

இவை அனைத்திலும் பன்னாட்டு முதலாளிகளுக்குச் சாதகமாகத்தான் தீர்ப்பு வரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ''நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படுதல், முதலீட்டாளரின் நியாயமான எதிர்பார்ப்புக்கு ஏற்ப நடத்தப்படுதல், பாரபட்சமின்மை'' என்பன போன்ற பொதுவான சொற்றொடர்கள் எல்லா இருதரப்பு ஒப்பந்தங்களிலும் நிறைந்திருக்கின்றன. இந்த சொற்றொடர்களைத் தங்கள் நலனுக்கு ஏற்ப வளைத்து விளக்கம் கூறும் வாய்ப்பை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் நோக்கத்தில் அரசு அதிகாரிகளும், பன்னாட்டு சட்ட வல்லுநர்களும் திட்டமிட்டேதான் ஒப்பந்தங்களை இப்படித் தயாரித்திருக்கிறார்கள்.

''போட்ட மூலதனத்துக்கு பாதுகாப்பு வேண்டும்'' என்ற நியாயமான நோக்கத்துக்காகத்தான் இந்த ஒப்பந்தங்கள் போடப்படுவதாக பன்னாட்டு நிறுவனங்கள் கூறுகின்றன. ஆனால் நாடாளுமன்றம், நீதித்துறை உள்ளிட்ட அரசின் இறையாண்மை, உள்நாட்டுத் தொழில்கள், இயற்கை வளம், சுற்றுச்சூழல் ஆகிய அனைத்துக்கும் பாதுகாப்பின்மையை உருவாக்குவதன் மூலம்தான் பன்னாட்டு மூலதனத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

சர்வதேச வர்த்தகச் சட்டங்களின் படி, இந்தியாவில் உள்ள மாநில அரசுகள் முதல் நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் வரையான அனைத்து அரசு உறுப்புகளின் நடவடிக்கைகளுக்கும் இந்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். அரசு உறுப்புகள் மட்டுமல்ல, ஒரு பன்னாட்டு நிறுவனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மக்கள் போராட்டம் நடத்தினால், அதற்கும் இந்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

அதாவது, ஒரு பன்னாட்டு நிறுவனம் சுற்றுச்சூழலை அழிப்பதையோ, இயற்கை வளத்தைச் சூறையாடுவதையோ, தொழிலாளர் உரிமையைப் பறிப்பதையோ எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தி, அதனை அரசு தடுக்கத் தவறியதன் விளைவாக பன்னாட்டு நிறுவனத்தின் இலாபத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டால், அதற்காகவும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய அரசைச் சர்வதேச விசாரணைக்கு இழுத்து, இழப்பீடு கோர முடியும்.

இது என்றோ வரவிருக்கும் அபாயம் குறித்த முன்னறிவிப்பு அல்ல, இன்று நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினை. மக்களுக்குத் தெரியாத வண்ணம் அரசாலும் ஆளும் வர்க்கத்தாலும் ஓட்டுப் பொறுக்கிகளாலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ள பிரச்சினை.

● **அழகு**

## வெனிசுலா:

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடுத்த ஆக்கிரமிப்புப் போர்!

**அமெரிக்க அடிவருடிகளின் அரசை வெனிசுலாவில் திணிக்கும் நோக்கத்தோடுதான், மாணவர் போராட்டம் என்ற பெயரில் ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சிக் கும்பலை இறக்கிவிட்டிருக்கிறது, அமெரிக்கா.**

அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்புப் போராளியும், வெனிசுலாவின் முன்னாள் அதிபருமான ஹியுகோ சாவேஸ் மறைந்து ஓராண்டாகிவிட்ட சூழலில் இன்று வெனிசுலா அமெரிக்காவின் சதிகளால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. மாணவர் போராட்டம் என்ற பெயரில் பயிற்றுவிக்கப்பட்ட ஆயுதக்குழுக்களைக் கொண்டு மிகப்பெரிய கலவரத்தை அமெரிக்கா அங்கே கட்டவிழ்த்துள்ளது. தலைநகரான காரகாஸூம், மெரிடா, டத்சிரா உள்ளிட்ட எல்லைப்புற நகரங்களும் கலவரக் காரர்களின் தொடர்தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

வெனிசுலாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்க அரசு சதி செய்வது இது முதல் முறையல்ல. சாவேஸ் உயிருடன் இருந்தபோது அவரது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும், அவரைக் கொலை செய்வதற்கும் அமெரிக்கா பலமுறை முயன்றுள்ளது. 2002-ஆம் ஆண்டில் சாவேஸூக்கெதிராக ஒரு இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பை நிகழ்த்தி அவரைக் கைது செய்யும் அளவிற்குச் சென்றது. ஆனால், சாவேஸூக்கு ஆதரவாக இலட்சக்கணக்கான மக்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டுப் போராடியதன் விளைவாக இரண்டு நாட்களுக்குள் இராணுவம் சாவேஸை விடுவித்துப் பின்வாங்கியது. அதனைத் தொடர்ந்து, 2005-ஆம் ஆண்டிலும் 2007-ஆம் ஆண்டிலும் மாணவர் போராட்டங்கள் என்ற பெயரில் சாவேஸூக்கெதிரான சதிகளை அமெரிக்கா அரங்கேற்றியது. ஒவ்வொரு முறையும் அமெரிக்காவின் சதிகளை, மக்களின் ஆதரவுடன் சாவேஸ் முறியடித்தார்.

தற்போது சாவேஸ் இல்லாத வெனிசுலாவில் அமெரிக்காவின் சதிகள் புத்துயிர் பெற்றுள்ளன. வெனிசுலா மீது அமெரிக்கா இந்த அளவிற்குத் தீராப்பகை கொள்ளக் காரணங்கள் பல உள்ளன.

எக்ஸான் மொபில் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலிருந்த எண்ணெய் வயல்களை வெனிசுலா நாட்டுடைமையாக்கியுள்ளது; பொதுத் துறை நிறுவனங்கள் முதற்கொண்டு இயற்கை வளங்கள் வரை அனைத்தையும் பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலுக்குத் திறந்துவிடக் கோரும் உலக வங்கி மற்றும் ஐ.எம்.எப். போன்ற ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களிலிருந்து வெளிசுலா விலகிக் கொண்டதுடன், மின்சாரம், தொலைதொடர்பு மற்றும் சிமெண்ட் உற்பத்தியை அரசுடைமையாக்கியுள்ளது; அமெரிக்காவின் வர்த்தக வலையத்தில் சிக்கித் தவித்த தென் அமெரிக்க நாடுகளுக்கென்று தனியான வர்த்தக வலையத்தையும் வெனிசுலா உருவாக்கியுள்ளது; அமெரிக்காவின் தடைகளை மீறி ஈரானுடன் இணைந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் புதிய கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க மேலாதிக்கத்துக்குச் சவால் விடும் இந்த நடவடிக்கைகள்தான், வெனிசுலாவில் எப்படியேனும் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றுவதற்கு அமெரிக்கா வெறிபிடித்து அலைவதற்குக் காரணம்.

மேற்கூறிய மாற்றங்கள் அனைத்தும் சாவேஸ் தலைமையில் சாதிக்கப்பட்டவை. சாவேஸின் மரணத்துக்குப் பின் அதிபர் பதவியேற்றிருக்கும் நிக்கோலஸ் மாதுரோ, சாவேஸின் வழியில் அமெரிக்க

அமெரிக்கா பின்னிருந்து இயக்கும் வெனிசுலாவின் மேட்டுக்குடி மாணவர்களைக் கொண்ட எதிர்ப்புரட்சி கலகக் கும்பலின் தாக்குதல்.



எதிர்ப்பில் உறுதியாக நிற்பதால், இவரது ஆட்சியையும் கவிழ்க்கும் நடவடிக்கைகளையும் அமெரிக்கா தீவிரமாக்கியிருக்கிறது. 2002-ஆம் ஆண்டில் சாவேஸுக்கெதிராக இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டுத் தோற்கடிக்கப்பட்ட, சி.ஐ.ஏ. கைக்கூலி லோபஸ் மென்டோசாவைத் தான் அமெரிக்கா மீண்டும் களத்தில் இறக்கியிருக்கிறது. சி.ஐ.ஏ. வினால் இயக்கப்படும் ஜனநாயகத்துக்கான தேசிய அறக்கட்டளை (National Endowment for Democracy) என்ற அமைப்பும், யு.எஸ்.எய்டு என்ற அமைப்பும்தான் தற்போதைய எதிர்ப்புரட்சிக் கலகங்களை நடத்துவதற்கு நிதியளிக்கின்றன. 2002-ஆம் ஆண்டு முதல் சாவேஸின் ஆட்சிக்காலம் முழுவதும், வெனிசுலாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மூலம் கள்ளத்தனமாக விநியோகிக்கப்பட்ட அமெரிக்க டாலரைத் தின்று வளர்ந்த இந்த குடிமைச் சமூக அமைப்புகள் (Civil Society Organizations) சமூகத்தில் குறிப்பிட்ட அளவு ஊடுருவியுள்ளன. சாவேஸ் அதிபரான பிறகு நடந்த 19 தேர்தல்களில் 18-இல் படுதோல்வியடைந்த போதிலும், சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் தோற்ற போதிலும் என்.ஜி.ஓ. க்கள் என்ற இந்த நச்சுக்கிருமிகள் அமெரிக்காவின் தயவில் உயிர் பிழைத்திருந்தன. மக்கள் செல்வாக்குப் பெற்ற சாவேஸ் என்ற தலைவர் மறைந்தவுடன், இந்த வலைப்பின்னல் மென்டோசாவின் தலைமையில் கலவரத்தைத் தொடங்கியிருக்கின்றது.


சாவேஸின் வழியில் அமெரிக்க எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மாதுரோ.

மேட்டுக்குடி இளைஞர்களைக் கொண்ட இந்தக் கலவரக் கும்பல், விலைவாசி உயர்வு, பெருகிவரும் குற்றச் செயல்கள், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றிற்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு, அதற்குத் தீர்வாக தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்தக் கோருகிறது. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும், மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களும்தான் வெனிசுலாவின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்று பிரச்சாரம் செய்கிறது.

வெனிசுலாவின் எதிர்த்தரப்பு தலைவரும் சி.ஐ.ஏ. கைக்கூலியுமான லோபஸ் மென்டோசா.



போராட்டக்காரர்கள் அமைதிவழியில் போராடுவதாக அமெரிக்க ஆதரவு ஊடகங்கள் சித்தரிக்கின்றன. ஆனால் இந்தக் கும்பல், அரசின் அடக்குமுறையை வரவழைப்பதற்காகவே வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றது. குறிப்பாக சமூக நல மருத்துவமனைகள், மானிய விலையில் உணவு வழங்கும் நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பொதுப் போக்குவரத்து சாதனங்கள் எனத் தொழிலாளர்களுக்கு அரசு செய்து தந்துள்ள வசதிகளைத் தாக்கி, தீயிட்டுக் கொளுத்துகிறது. மின் இணைப்புகளைத் துண்டித்து, மின்உற்பத்தி நிலையங்களைத் தாக்குகிறது.


தெருவில் தடையரண்களை அமைத்துக் கொண்டு பொதுமக்களையும், அரசு ஆதரவாளர்களையும் தாக்குகின்றது. அரசு அலுவலர்களைத் துப்பாக்கியால் சுடுகிறது. 'ஸ்நைபர்' எனப்படும் தொலைதூரத்திலிருந்து மறைந்திருந்து சுடும் துப்பாக்கியுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சக போராட்டக்காரர்களையே தாக்கி அவர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுவிட்டதாக பொய்ப்பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிடுகின்றனர். ஆட்சிக்கவிழ்ப்பில் ஈடுபடுவதற்குத் தேவையான ஆயுதங்களையும் இவர்கள் ஏராளமாக வாங்கிக் குவித்துள்ளனர். வெனிசுலாவின் முக்கியமான இரு பல்கலைக்கழகங்கள் துணை இராணுவப் படைகளைப் பயிற்றுவிக்கும் கூடாரமாகவும், ஆயுதக் கிடங்குகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இது ஒரு பாசிசக் கும்பல் என்றும் இதனை நசுக்க வேண்டும் என்றும் வெளிப்படையாகப் பேசிவந்த வெனிசுலாவின் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த கேப்டன் ஜோஸ் கில்லன் ஆர்க்யூ, இந்த கலகக் கும்பல் அமர்த்திய கூலிப்படையால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலைகள் மற்றும் நாசவேலைகளை நிறைவேற்றுவதில் தேர்ச்சி பெற்ற கொலம்பிய போதை மருந்து மாஃபியாக்கள் இதற்காகவே வெனிசுலாவுக்குள் இறக்கப்பட்டிருக்கின்றனர். கலவரத்தைத் தூண்டுவது, ஆட்சிக்கவிழ்ப்பில் ஈடுபட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைத் தூக்கியெறிந்துவிட்டு அமெரிக்க ஆதரவு பொம்மை அரசை நிறுவுவதுதான் இவர்கள் நோக்கம் என்பதால், பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசு விடும் அழைப்புக்களை இந்தக் கலவரக் கும்பல் தொடர்ந்து மறுத்து வருகின்றது.

இந்தச் சிறு கும்பல் நடத்தும் போராட்டங்களை, மிகப் பெரிய மக்கள் எழுச்சி போல அமெரிக்க ஆதரவு சர்வ தேச ஊடகங்கள் சித்தரிக்கின்றன. அமைதியான மக்கள் போராட்டத்தை வெனிசுலா அரசு கடுமையாக ஒடுக்கு வதாகவும், மனித உரிமை மீறல்கள் நடந்து வருவதாகவும் பரப்புவதன் மூலம் அமெரிக்கத் தலையீட்டை நியாயப்படுத்தும் முயற்சிகள் நடக் கின்றன.

அமெரிக்கா திரைமறைவில் நின்று கொண்டு நடத்திவரும் இத்தகைய ஆட்சிக்கவிழ்ப்பு வேலைகளை வெனி சுலா அம்பலப்படுத்தியுள்ளது. அமெ ரிக்கத் தூதரக அதிகாரிகள் போராட்டக் காரர்களுக்குப் பண உதவியும், ஆயுத உதவிகளும் செய்வதாகக் கூறி பல அதி காரிகளை வெனிசுலா வெளியேற்றி யுள்ளது. குறிப்பாக, கெல்லி கெய்டர் லிங் என்ற தூதரக அதிகாரி சி.ஐ.ஏ.வின் உளவாளி என்பதும், வெனிசுலாவில் ஆட்சிக் கவிழ்ப் பில் ஈடுபடுவதற்காகவென்றே அவரை சி.ஐ.ஏ. நியமித் துள்ளதாகவும் அம்பலமாகியுள்ளது. கெல்லி கெய்டர் லிங்கினால் நேரடியாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்களுள் ஒருவரான கியூபாவைச் சேர்ந்த முன்னாள் சி.ஐ.ஏ. உளவாளி ராவுல் கபோடி இதனை அம்பலப்படுத்தி யுள்ளார். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அமெ ரிக்கா தனது உளவாளிகளை எப்படி உருவாக்குகிறது என்பதையும் விளக்கியுள்ளார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டின் நிறுவனம், ஜனநாயகத்துக்கான தேசிய அறக்கட்டளை, அகிம்சை வழிப் போராட்டங் களுக்கான சர்வதேச மையம் போன்ற பல நிறுவனங்கள் வெனிசுலாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவது,



2002-ஆம் ஆண்டு வெனிசுலாவில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பின் பின்னணியில் இயங்கிய ஆல்பர்ட் ஐன்ஸ்டின் கழக நிறுவனரும், அமைதிவழி ஆட்சிக்கவிழ்ப்பு சித்தாந்த வழிகாட்டியுமான ஜென் ஷார்ப்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பட்ட மேற்படிப்பு வசதிகளை ஏற் படுத்தித்தருவது, பேராசிரியர்களுக்கு சர்வதேச மாநாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்களை உரு வாக்கித்தருவது எனப் பல வழிகளில் மாணவர்களையும் பேராசிரியர்களை யும் தங்களது வலையில் விழவைக் கின்றனர்.

வெனிசுலாவில் தற் போதும், இதற்கு முன்னரும் பல் வேறு மாணவர் போராட்டங்களை ஒருங்கிணைக்கும் மாணவ தலைவர் கள் இத்தகைய நிறுவனங்களிடம் உதவி பெற்றுப் படித்தவர்களே. அமைதிவழி ஆட்சிக்கவிழ்ப்பு என்ற கோட்பாட்டை முன்வைத்து, பனிப் போர் காலத்துக்குப் பின் சி.ஐ.ஏ நடத் திய ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கை களுக்கெல்லாம் சித்தாந்த வழிகாட்டி யாக இருந்த ஜென் ஷார்ப் என்பவரின் (சர்வாதிகாரத்திலிருந்து ஜனநாயகத்துக்கு என்ற நூலின் ஆசிரியர்) ஆல்பர்ட் ஐன்ஸ்டின் நிறுவனம்தான் 2002-ஆம் ஆண்டு வெனிசுலாவில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் செயல்பட்டது.

தன்னார்வக் குழுக்கள், பல்கலைக்கழக வளாகங்கள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக அமெரிக்க அடிவருடி களின் கையில் இருக்கும் ஆயுதம், வெனிசுலாவின் ஊட கங்கள். ஊடகத்துறையின் சுமார் 70 விழுக்காடு முதலாளி களிடமும், 20 விழுக்காடு மக்கள் கூட்டுறவிடமும், 5 விழுக்காடு அரசிடமும் உள்ளன. பொய்களையும் வதந்திகளையும் பரப்புவதிலும், தனியார்மய ஆதரவு பொதுக்கருத்தை தந்திரமாக உருவாக்குவதிலும் தனியார் ஊடகங்கள் முக்கியப் பாத்திரமாற்றுகின்றன. அன்னா ஹசாரே போராட்டத்தை இங்கே கார்ப்பரேட் தொலைக் காட்சிகள் ஊதிப் பெருக்கி யதைப் போலவே, வெனிசுலா வின் எதிர்ப்புரட்சி கலகக் கும் பலின் நடவடிக்கைகளை அந் நாட்டின் தனியார் ஊடகங்கள் அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சி போல சித்தரிக்கின்றன.

அமெரிக்காவின் சதிகளுக்கு எதிராக வெனிசுலாவின் உழைக்கும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் வரையப்பட்டுள்ள சித்திரம்.




வெனிசுலாவில் அரங்கேறி வரும் சதிச்செயல்களை பின்னி ருந்து இயக்குவது அமெரிக்கா தான் என்பது உலகத்துக்கே தெரிந்திருந்தாலும், வழக்கம் போல அமெரிக்கா அதனை மறுக்கிறது. மறுபுறம் வெனி சுலாவில் நேரடியாகத் தலை யிடுவதற்குத் தேவையான அனைத்து வேலைகளையும்

அமெரிக்கா பகிரங்கமாகவே செய்து வருகிறது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி, 'வெனிசுலா அரசு தனது மக்களுக்கெதிராக நடத்திவரும் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்' என எச்சரிக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையை உடனடியாக இதில் தலையிட வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், 'வெனிசுலாவில் நடைபெறும் சம்பவங்கள் கவலையளிப்பதாகவும், அதிபர் மாதுரோ உடனடியாக அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும்' எனவும் எச்சரிக்கிறார். வெனிசுலா மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என தென்அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பையும், ஐ.நா.வையும் அமெரிக்கா தொடர்ந்து நிர்பந்திக்கிறது.




அமெரிக்காவின் இதுபோன்ற சதிகளைத் தங்களது சொந்த அனுபவத்தினூடாக வெனிசுலாவின் மக்கள் உணர்ந்திருப்பதால், இதனை அவர்கள் முறியடிப்பார்கள் என்பது திண்ணம். ஆனால், அமெரிக்காவால் அடுத்தடுத்து இதுபோன்ற கலவரங்களையும், மாணவர் போராட்டங்களையும் வெனிசுலாவில் நடத்த முடிவதற்கு வேறொரு அடிப்படையும் இருக்கிறது. 21-ஆம் நூற்றாண்டின் சோசலிசம் என்ற பெயரில் தரகு முதலாளிகள் உள்ளிட்ட அனைத்து வர்க்கங்களையும் உள்ளடக்கிய பல கட்சி ஜனநாயக அரசுதான் வெனிசுலாவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அமெரிக்க ஆதரவு தரகு முதலாளி வர்க்கம் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு செல்வாக்கு செலுத்துகிறது. இவற்றையெல்லாம் மீறி, மக்களிடம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்து, அந்த அதிகாரத்தின் மூலம்தான் பல சீர்திருத்தங்களை அமலுக்குக் கொண்டுவந்திருக்கிறார் சாவேஸ். ஆகவே, கீழிருந்து மக்களைத் திரட்டி நடத்தப்பட்ட புரட்சி, அதிலிருந்து உருவாக்கப்பட்ட தொழிலாளர் - விவசாயிகள் கமிட்டிகளின் அரசியல் அதிகாரம் என்ற நிலை அங்கு இல்லை.

அமெரிக்க எதிர்ப்பு, தனியார்மய எதிர்ப்பு, மக்கள்நல நடவடிக்கைகள் பலவற்றை சாவேஸ் எடுத்திருந்த போதிலும், அவை ஏற்கெனவே இருந்த முதலாளித்துவ அதிகார வர்க்க அரசமைப்பின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன. இந்த முதலாளித்துவ அதிகார வர்க்கமும் சாவேஸின் கட்சியைச் சேர்ந்த முதலாளித்துவப் பேர்வழிகளும்தான் பதுக்கல் முதல் ஊழல் வரையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். நாம் போலி கம்யூனிஸ்டு என்று இங்கே கூறுவதைப் போல, அங்கே பொலி பூர்சுவா (பொலிவாரியன் பூர்சுவா) என்று ஏளனமாக இவர்களை அழைக்கிறார்கள் வெனிசுலா மக்கள். கட்டுச் சோற்றுக்குள்ளிருக்கும் பெருச்சாளி போல வெனிசுலா அரசை உள்ளிருந்து அழிக்கும் வேலையை இவர்கள்தான் செய்து வருகின்றனர். அமெரிக்க ஆதரவு எதிர்ப் புரட்சி சதிக் கும்பல் செல்வாக்கு பெறும் வாய்ப்பை இவர்கள்தான் ஏற்படுத்தித் தருகின்றனர்.

வெனிசுலாவில் அமெரிக்கா தற்போது அரங்கேற்றி வரும் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கை, இராக், லிபியா, சிரியா போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட ஆக்கிரமிப்புகள், தலையீடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பிய வண்ணப்புரட்சிகள் ஆகியவற்றுடன் ஒப்பிடத்தக்கது என்கிற அதே நேரத்தில், இதற்கொரு கூடுதல் முக்கியத்துவமும் இருக்கிறது. கம்யூனிசம் தோற்றுவிட்டது, முதலாளித்துவமும் அமெரிக்காவின் உலக மேலாதிக்கமும் நிலைநாட்டப்பட்டுவிட்டன என்று ஏகாதிபத்திய வாதிகள் கொக்கரித்து வந்த காலத்தில், பின்தங்கிய மற்றும் ஒடுக்கப்படும் நாடுகளின் மீது மறுகாலனியாக்க தாக்குதல் கட்டவிழ்த்து விடப்படும் இந்தக் காலத்தில், அலையை எதிர்த்து நீந்த முடியும் என்ற நம்பிக்கையின் சின்னமாக வெனிசுலா ஒளிர்கிறது. கல்வி, மருத்துவம், பொதுச்சேவைகள் ஆகிய அனைத்தையும் தனியார்மயமாக்கும் போக்கு உலகெங்கும் நிகழ்ந்துவரும் நிலையில், இவற்றையெல்லாம் மக்களின் அடிப்படை உரிமையாக்கியிருப்பதுடன், மிகக் குறுகிய காலத்தில் மக்கள் அனைவருக்கும் இச்சேவைகளை வழங்கியுமிருக்கிறது சாவேஸின் அரசு. அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய அரசுகளின் அச்சத்திற்கும் ஆத்திரத்துக்கும் அதுதான் காரணம். உலகெங்கிலும் உள்ள உழைக்கும் வர்க்கம் வெனிசுலாவுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டியதற்கான காரணமும் இதுதான்.

வெனிசுலாவில் தற்போது நடைபெற்றுவரும் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டின் சரியான தன்மையை மீண்டும் நிரூபித்திக்கிறது. ஏகாதிபத்திய கைக்கூலிகள் மற்றும் தரகு முதலாளிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்யாமல், ஆலைகள், தொழில்கள் முதல் ஊடகங்கள் வரையிலான வற்றை அவர்கள் கட்டுப்பாட்டிலேயே விட்டுவைத்து, நாடாளுமன்ற அதிகாரத்தை மட்டும் கையில் வைத்துக் கொண்டு அரசு அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்ள முடியாது என்பதற்கு வெனிசுலாவின் நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

● கதிர்

## கொத்தடிமைத்தனம், விபச்சாரம்:

# தனியார்மயம் தீவிரப்படுத்தும் பேரபாயங்கள்!

**சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள் கடத்தி வரப்பட்டு தமிழகம் உள்ளிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொத்தடிமைகளாக விற்கப்படுவதும், விபச்சாரத்தில் தள்ளப்படுவதும் அதிகரித்த அளவில் நடந்து வருகிறது.**

அதிகாலையில் பரபரப்பாக இயங்கும் தமிழகத்தின் பேருந்து, ரயில் நிலையங்களில் சரிவரத் தூங்காத சிவந்த கண்களோடு அவசரஅவசரமாகத் தாங்கள் வேலை செய்யுமிடத்திற்குப் பயணிக்கும் அவர்களின் முகங்கள் நம் அனைவருக்கும் பரிச்சயமானவைதான். கிழக்கு, வடகிழக்கு மற்றும் மத்திய மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இன்று தமிழகம் முழுவதும் உள்ள பெரிய, சிறிய நகரங்களில் சாலைகள், பாதாளச்சாக்கடைகள், வானுயர் கட்டிடங்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள், பிரம்மாண்ட மெட்ரோ ரயில், விமான நிலையம் போன்ற கட்டுமானப் பணிகளில் அற்பக்கூலிக்குப் பணியாற்றி வருவதும், இந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் எந்த விதமான தொழிற்சங்க உரிமையும் இன்றி மிகக் கொடூரமான முறையில் சுரண்டப்பட்டு வருவதும் பார்த்துபார்த்துப் பழகிப் போய்விட்ட விசயமாகிவிட்டது. இந்நிலையில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் புலம்பெயர்ந்த ஆண் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகவும், பெண்கள் அதையும் தாண்டி விபச்சாரத்தில் தள்ளப்படும் கொடுமையும் நடந்திருப்பது அம்பலமாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம், சத்தீஸ்கரைச் சேர்ந்த இடைத்தரகன் டிஜுராம் கொர்ரம், அம்மாநிலத்தைச் சேர்ந்த பன்னிரெண்டு பழங்குடிப் பெண்களை ரயில் மூலம் திருப்பதிக்குச் செல்லலாம் என ஆசை காட்டி நாமக்கல்லிற்குக் கடத்தி வந்து, மணிக்கட்டிப்புதூரிலுள்ள ஜெம்ஸ் அக்ரோ என்கிற காய்கறிகளைப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையில் கொத்தடிமையாக விற்றுச் சென்றுவிட்டான்.

இவர்களைப் போன்றே பல சத்தீஸ்கர் பழங்குடிப் பெண்கள் அந்நிறுவனத்தில் கொத்தடிமைகளாக இருந்துள்ளனர். இப்பெண்கள் காய்கறிகளைப் பதனிட அசிடிக் அமிலத்திலும், வினிகரிலும் கைகளை நனைத்தபடி ஒருநாளுக்கு 18 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அரிப்பு, ஒவ்வாமை போன்ற கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். ஒரு நாளைக்கு இரண்டு வேளை சோறு, தேங்காய் எண்ணெய், குளியல் சோப்பு மற்றும் மாதச்சம்பளமாக 100 ரூபாய் கொடுத்து, இப்பழங்குடியினப் பெண்களின் உழைப்பை ஒட்டச்சுரண்டியிருக்கிறது, ஜெம்ஸ் அக்ரோ. அவர்கள் பல நாட்களில் நள்ளிரவில் எழுப்பப்பட்டு வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இதனை எதிர்த்து நின்றால் தனியறைகளில் அடைத்து வைக்கப்பட்டு, முதலாளிகளாலும் அவர்களின் கங்காணிகளாலும் பாலியல்

நாமக்கல் - மணிக்கட்டிப்புதூரிலுள்ள ஜெம்ஸ் அக்ரோ நிறுவனத்தில் கொத்தடிமைகளாகத் தள்ளப்பட்டு, பின் மீட்கப்பட்ட சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள்.



வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். தாங்கள் ஏமாற்றப்பட்டு கொத்தடிமைகளாய் வதைக்கப்படுவதை உணர்ந்தாலும், வெளியே தப்பிக்க முடியாதபடி, ஒற்றைக் கழிப்பறை கொண்ட அறைகளில் அவர்களனைவரும் அடைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கிடையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம், தனக்குக் கிடைத்த சிறிய வாய்ப்பைப் பயன்படுத்தி, தன்னையும் மற்றவர்களையும் காப்பாற்றியிருக்கிறார் அந்த பன்னிரெண்டு பெண்களில் ஒருவரான ராஜேஷ்வரி சலம். அக்கொத்தடிமைத் தொழிற்சாலையில் இருந்து தப்பி தன் சொந்த மாநிலமான சத்தீஸ்கரை அடைந்த சலம், அம்மாநிலத்தின் நாராயண்பூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்து, தன்னுடன் வேலை செய்த 60 பழங்குடிப் பெண்களையும் அக்கொத்தடிமை முகாமிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்.

கடந்த ஆண்டு நவம்பரில் இச்சம்பவம் வெளியே வந்த சமயத்தில், ஈரோட்டிலுள்ள ஒரு தொழிற்சாலையில் கொத்தடிமைகளாக வேலை செய்துவந்த 24 சத்தீஸ்கர் பழங்குடிப் பெண்கள் மீட்கப்பட்டனர். மேலும், கடந்த பிப்ரவரியில் சத்தீஸ்கரைச் சேர்ந்த 117 பழங்குடியினர் ஜம்முவில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். 48 குழந்தைகள் உட்பட 23 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் கடத்தல்காரர்களால், பனிரெண்டு லட்சத்திற்கு விற்கப்பட்டுள்ளனர். குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் முன்பணமாகக் கொடுக்கப்பட்டு இவர்கள் ஜம்முவிலுள்ள செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக விற்கப்பட்டனர். காலை 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரை 3000-க்கும் அதிகமான செங்கற்களை அறுக்கும் இவர்களுக்கு, வாரச்சம்பளமாக குடும்பத்திற்கு 500 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் இயற்கை உபாதைக்குச் செல்லும்பொழுதுகூட அங்குள்ளவர்களால் கண்காணிக்கப்பட்டுள்ளனர். காய்ச்சலுற்ற குழந்தைகளை மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்குக்கூட இவர்களை அனுமதிக்காமல், சிறைக்கைதிகளைவிடக் கேவலமாக நடத்தியிருக்கின்றனர் செங்கல் சூளை முதலாளிகள். கடைசியில் அவர்களுடன் இருந்த 31 வயது மதிக்கத்தக்க ஓம் பிரகாஷ், அங்கிருந்து தப்பித்து தன்னார்வ நிறுவனங்களுக்குத் தகவல் தந்த பிறகே அம்மக்கள் மீட்கப்பட்டனர்.



ஜெம்ஸ் அக்ரோ ஆலையில் கொத்தடிமைகளாகச் சுரண்டப்பட்டு வந்த பழங்குடியினப் பெண்களை சத்தீஸ்கர் மாநில அரசு உதவியோடு மீட்ட ராஜேஸ்வரி சலம்.

கொத்தடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக மாவட்ட ஆட்சியர், போலீசு கண்காணிப்பாளர், வட்டாட்சியர், தொழிலாளர் நல ஆணையர் - என ஒரு பெரும் அதிகார வர்க்கமே இருந்த போதும், அவர்களின் கண்களுக்குக் கீழ்தான் இந்தக் கொடூரம் நடந்திருக்கிறது. இக்கும்பல் தங்களின் அதிகாரத்தை முதலாளிகளிடமிருந்து இலஞ்சம் வாங்குவதற்குப் பயன்படுத்துகிறதேயொழிய, கொத்தடிமைகளாகச் சுரண்டப்படும் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு ஒருக்காலும் பயன்படுத்துவதில்லை என்பதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வெளியே தெரிந்த செய்திகளுக்கு அப்பால், சத்தீஸ்கரின் பழங்குடியினப் பெண்கள் மும்பை, டெல்லி, பஞ்சாப் மற்றும் இந்தியாவின் தென்பகுதிகளில் உள்ள பெருநகரங்களுக்குக் கடத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு விபச்சாரத்தில் தள்ளப்படுவதும் நடந்து வருகிறது. திரையில் தொடர்ச்சியாக மாறிக் கொண்டேயிருக்கும் பிம்பங்கள் போல, இம்மக்களது வேலை மற்றும் வாழ்நிலையில் வலுக்கட்டாயமாக பல மாற்றங்கள் அடுத்தடுத்து திணிக்கப்பட்டதுதான் அவர்களின் அவல நிலை அனைத்திற்கும் காரணமாகும். கார்ப்பரேட் பகற்கொள்ளையும் அரசு பயங்கரவாதமும் தலைவிரித்தாடும் சத்தீஸ்கரில், 'நாட்டின் வளர்ச்சி' என்கிற பெயரில் பல கொடூரங்கள் இம்மக்கள் மீது ஏவிவிடப்படுகின்றன. இவர்களின் பூர்வீக வாழ்விடமான மலைகளில் உள்ள அரிய கனிம வளங்களைக் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் தூக்கிக் கொடுப்பதற்கு வசதியாக, இம்மக்கள் வலுக்கட்டாயமாகத் தமது சொந்த பூமியிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர். இந்த கார்ப்பரேட் கொள்ளையை எதிர்ப்பவர்கள் மீது 'மாவோயிஸ்டு



சத்ரி போதாய் 20

''நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம் என்று எதுவும் கிடையாது. சில சமயங்களில் நள்ளிரவு நேரத்தில் தூக்கத்தில் இருந்து எங்களை எழுப்பி வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்துவார்கள்.''

பயங்கரவாதிகள்' என்ற முத்திரை குத்தப்பட்டு, அவர்கள் மீது ''காட்டுவேட்டை'' என்ற பெயரில் அரசு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக, வாழ்வாதாரங்களை இழந்து அகதி நிலைக்குத் தள்ளப்படும் பழங்குடியின மக்களை ஆசை காட்டிக் கடத்திச் சென்று கொத்தடிமைகளாக விற்பது ஒரு தொழிலாகவே அம்மாநிலத்தில் நடந்து வருகிறது.

*''நான் மீட்கப்பட்ட பொழுது, எனது முகம் ஆலையில் பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களால் முழுவதுமாக வெந்து போயிருந்தது. இதற்காக எனக்கு எந்த நட்டஈடும் வழங்கப்படவில்லை.''*



யசோதா 20

சத்தீஸ்கரில் மட்டும் இது வரை 9,000 பெண்கள் காணாமல் போயுள்ளதாக அம்மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால், உண்மையில் இந்த எண்ணிக்கை 90,000-யும் தாண்டும் என அங்குள்ள சமூகநல அமைப்புகள் கூறுகின்றன. குறிப்பாக பிலாஸ்பூர், துர்க், ராய்ப்பூர், ராய்காட், பலாவ்டா பஜார், ஜன்ஞ்கீர் சம்பா, ஜக்தல்பூர் போன்ற இடங்களில் ஆள்கடத்தல் கோலோச்சுவதாக அரசின் அதிகாரப்பூர்வ தகவல்கள் கூறுகின்றன. கடந்த நான்காண்டுகளில் நாராயண்பூர் மற்றும் கன்கெர் மாவட்டங்களில் மட்டும் 10,000-க்கும் அதிகமான பெண்கள் காணாமல் போயுள்ளனர். ரூபாய் 5,000-லிருந்து 50,000 வரை விற்கப்படும் இப்பெண்கள் பெருநகரங்களில் உள்ள புதுப் பணக்காரர்களின் வீடுகளில் வேலையாட்களாகவும், தொழிற்சாலைகளில் குறைந்த கூலிக்கு கொத்தடிமைகளாகவும், பல சமயங்களில் விபச்சாரத்திலும் பலவந்தமாகத் தள்ளப்படுகிறார்கள்.

தமிழகம் உள்ளிட்டு பல்வேறு மாநிலங்களில் வேலை தேடி புலம் பெயரும் இத்தொழிலாளர்கள் இத்தகைய கொடிய அவலநிலையில் இருத்தி வைக்கப்பட்டிருக்கும்பொழுது, அத்தகைய அவல நிலையை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக, தமிழர்களின் தாயகமாக தமிழ்நாடு நீடிக்க அதிக எண்ணிக்கையில் வெளிமாநிலத்தவர் குடியேறுவதை தடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை போன்றவை வழங்கக் கூடாது என்றும் இனவெறியைத் தூண்டிவிடும் போராட்டங்களை நடத்துகின்றன, த.தே.பொ.க., நாம் தமிழர் போன்ற தமிழினவாத அமைப்புகள். மகாராஷ்டிராவில் நவநிர்மாண் சேனா குண்டர்கள் மராட்டியம் மராட்டியர்களுக்கே சொந்தம் எனக்கூறி, இம்மக்களை விரட்டக் கோருகின்றனர். தங்கள் வாழ்விடங்களிலிருந்து கடத்தப்பட்டு, கொத்தடிமைகளாக விற்கப்பட்டு அவல வாழ்வில் வதைபடும் இம்மக்களை எதிரிகளாகச் சித்தரிப்பது வக்கிரத்தின் உச்சமாகும்.

அமெரிக்காவிற்கு அடிமைகளாகக் கடத்தி வரப்பட்ட ஆப்பிரிக்க கருப்பின மக்கள் நவீன அமெரிக்காவை உருவாக்கியதைப் போல, இன்று இந்தியாவின் பல்வேறு நகரங்களில் அடிக்கட்டுமான வசதிகளை உருவாக்குபவர்கள் ஒரிசா, பீகார், சத்தீஸ்கர் போன்ற 'வளர்ச்சி'யற்ற மாநிலங்களிலிருந்து வெளியேறிவரும் தொழிலாளர்கள்தான். இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் தனியார்மயம் - தாராளமயம் நாடெங்கும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியைத்தான் உருவாக்கியிருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சிதான் தொழிலாளர்களை அகதிகளாகச் சிதறடிக்கிறது. முதலாளித்துவத்தின் கொடிய சுரண்டலுக்கு இந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சி அவசியமான ஒன்றாகும். எனவே, சத்தீஸ்கரைச் சேர்ந்த பழங்குடியினர் கொத்தடிமைகளாக விற்கப்படுவதையும், விபச்சாரத்தில் தள்ளப்படுவதையும் கிரிமினல் ஆள்கடத்தல் கும்பலின் நடவடிக்கையாகப் பிரித்துப் பார்க்க முடியாது. வேலை வாய்ப்பு, முன்னேற்றம், வளர்ச்சி - என ஆளுங்கும்பலும் ஓட்டுக்கட்சிகளும் வாய்ப்பந்தல் போடுகிறார்களே, அந்த மோசடியின் விளைவுகள்தான் இவை.



சிகாய் மந்தாவி 21

*''சில பெண்களைத் தனியாகப் படுக்க வைப்பார்கள். அப்பெண்கள் தினந்தோறும் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டார்கள். இதனால் கர்ப்பம் அடைந்த பெண்கள் வலுக்கட்டாயமாகத் தமது சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.''*

● அன்பு

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

வமைப்புகளின் சார்பில் வெளியிடப் பட்ட ''மோடி: 24X7 தேசிய இம்சை'' என்ற சிறுவெளியீடு உழைக்கும் மக் களிடம் மகத்தான வரவேற்பைப் பெற்றது. சென்னையில் ''கல்வி உரிமை வேண்டுமா? தேர்தலுக்குக் கட் அடி!'' என்ற முழக்கத்துடன் வெளி யிடப்பட்ட பு.மா.இ.மு.வின் துண்டுப் பிரசுரம் மாணவர்களிடம் பெருத்த வர வேற்பைப் பெற்றது.



தருமபுரியில்...

சென்னை - மதுரவாயல் பகுதியில் குறி சொல்பவர்போல வேடமிட்டுக் கொண்டு ''ஜக்கம்மா வந்திருக்கேன்'' என்று ஓங்கிக் குரலெழுப்பி, ''ஓட்டுப் போட்டால் குடி தண்ணீரைக் காசு கொடுத்துத்தான் வாங்கணும்; குழந்தை களைப் படிக்க வைக்க லட்சக் கணக்குல பணத்தைக் கொட் டணும்; ரேசன் கடை காணாம போயிடும்; அரசு ஆசுபத்திரி இருக்காது'' என்று மறுகாலனியாதிக்கக் கொள்கையால் காத் திருக்கும் பேரபாயத்தையும், போலி ஜனநாயகத்தை அம்பலப் படுத்தியும் 12.4.2014 அன்று பு.மா.இ.மு., பெ.வி.மு. தோழர்கள் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். புதிய உத்தியுடன் நடந்த இப்பிரச்சாரம் உழைக்கும் மக்களிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றது.

புதுச்சேரியில் அதிகார வர்க்கமும் போலீசும் மேற் கொண்ட அடாவடி, அச் சுறுத்தல்களை முறியடித்து 15.4.2014 அன்று பு.ஜ.தொ.மு. தோழர்கள் செஞ்சட்டையுடன் செங் கொடி ஏந்தி முழக்கமிட்ட படியே இரு சக்கர வாகனப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, கிராமங்களில் தேர்தல் புறக் கணிப்பு தெருமுனைக் கூட்டங்களை நடத்தினர். காஞ்சிபுரம் அருகே வெண் பாக்கத்தில் உள்ள ஆக்சில் இந்தியா தொழிலாளர் சங்கத்தின் சார்பிலும், திருப்பெரும் புதூர் பேருந்து நிலையம் அருகேயும் பு.ஜ.தொ.மு. தெரு முனைக் கூட்டங்களை நடத்தியது. திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. சார்பில் கும்மிடிப்பூண்டியில் விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த சைக்கிள் பேரணியும் தெருமுனைக் கூட்டங்களும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன. ஓசூரில் ஏப்ரல் 22 அன்று லெனின் பிறந்த நாள் விழாவை தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கமாக மேற் கொண்ட பு.ஜ.தொ.மு. பல இடங்களில் ஆலை வாயில் கூட்டங்களை நடத்தியது.



கும்மிடிபூண்டியில்...



நெய்வேலியில் வாழ்வுரிமை பறிக்கப்பட்ட மக்களின் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்.

காவிரிப் பாசனப் பகுதிவாழ் மக்களின் மீது எறியப் பட்டுள்ள அணுகுண்டுதான் மீதேன் எடுப்புத் திட்டம் என் பதையும், மக்கள் போராட்டத்தால் மட்டுமே இதனைத் தடுக்க முடியும் என்பதையும் உணர்த்தி சீர்காழி வட்டாரத்தில் வி.வி.மு. தோழர்கள் மேற்கொண்ட பிரச்சாரத்தால் உணர்வு பெற்ற உழைக்கும் மக்கள், இனி எவனாவது ஓட்டுக் கேட்டு வந்தால் செருப்பையும் விளக்குமாறையும் எடுத்து வைக் கிறோம் என்று தமது வெறுப்பை வெளிப்படுத்தினர்.

நெய்வேலியில் என்.எல்.சி. நிறுவனத்தின் ஆளுகைக்குட் பட்ட தாண்டவன் குப்பம், ஒர்க்ஷாப் கேட், ஆட்டோ கேட், அண்ணா ஸ்டாப் பகுதிகளில் வசிக்கும் 5000 - க்கும் மேற் பட்ட உழைக்கும் மக்களின் குடியிருப்புகளைக் காலி செய்யுமாறு அச்சுறுத்தி, குடி நீர், மின்சாரத்தை என்.எல்.சி. நிறுவன அதிகாரிகள் துண்டித் துள்ளதை எதிர்த்து, வாழ் வுரிமை பறிக்கப்பட்ட இப் பகுதிவாழ் மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அவர் களது நியாயமான போராட்டத்தை ஆதரித்து துணைநிற்கும் கடலூர் மாவட்ட ம.உ.பா.மையம் இப் போராட்டத்தை தேர்தல் புறக் கணிப்பு போராட்டமாக வளர்த்தெடுத்தது. எங்கள் வாழ் வுரிமையைப் பறிப்பதைத் தடுக்க முன்வராத ஓட்டுக் கட்சி களால் எங்களுக்கு எந்தப் பயனுமில்லை என்று அப்பகுதிவாழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்து தொடர்ந்து போராடி வரு கிறார்கள்.

12.4.2014 அன்று வி.வி.மு.சார்பில் உசிலம்பட்டியிலும், 15-ஆம் தேதியன்று பு.ஜ.தொ.மு. சார்பில் சிவகங்கையிலும், 18-ஆம் தேதியன்று தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் தர்மபுரி பேருந்து நிலையம் அருகே சந்தைப் பேட்டையிலும், 19-ஆம் தேதியன்று ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய அமைப்புகளின் சார்பில் மதுரை - ஒத்தக்கடையிலும், 21-ஆம் தேதியன்று பு.மா.இ.மு. சார்பில் கரூரிலும் நடந்த தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார பொதுக்கூட்டங் களும் கலைநிகழ்ச்சிகளும் இதர பகுதிகளில் நடந்த தெருமுனைக் கூட்டங்களும் உழைக்கும் மக்களிடம் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றன.

ஓட்டுப் போட்டு ஓய்ந்து போயுள்ள மக்களிடம், மக்கள் போராட்டக் கமிட்டிகளே உண்மையான மாற்று என்பதை உணர்த்திய இப்பிரச்சார இயக்கம், தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களை உணர்வூட்டி சிந்திக்க வைத்துள்ளது.

- பு.ஜ. செய்தியாளர்கள்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# ‘வளர்ச்சி’: கொழுத்தது யார்? தெருவில் நிற்பது யார்?

தேர்தல் பரபரப்பில் தமிழகமே மூழ்கடிக்கப் பட்டிருந்த வேளையில், தமது திருபெரும்புதூர் தொழிற் சாலையில் பணியாற்றிவரும் நிரந்தரத் தொழிலாளர்களை விருப்ப ஓய்வுத்திட்டத்தில் கையெழுத்திட்டுவிட்டு வெளி யேறுமாறு உத்தரவிட்டது நோக்கியா நிறுவனம். இந்த உத்தரவு நோக்கியாவில் பணிபுரியும் 6600 தொழிலாளர் களுக்கு மட்டுமின்றி, நோக்கியாவிற்கு உதிரிபாகங்களை உற்பத்தி செய்து வழங்கும் பாக்ஸ்கான் உள்ளிட்டு அதன் துணைநிறுவனங்களில் பணிபுரிந்துவரும் 25,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. நோக்கியாவின் இம் முடிவைக் கண்டித்து கடந்த ஏப்ரல்-1 அன்று சென்னை - சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பாக ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர், நோக்கியா தொழிலாளர்கள்.

பின்லாந்து நாட்டைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகமான நோக்கியா, தமிழகத்தில் முதலீடு செய்ய முன்வந்ததை வளர்ச்சி யின் அடையாளமாகச் சித்தரித்துக் கொண்டாடினார்கள். அந்த வகையில் நோக்கியாவைத் தமிழகத்திற்கு கொண்டுவந்தது நான்தான், இல்லை நான்தான் என்று ஜெயாவும், கருணாநிதியும் போட்டிபோட்டுக் உரிமை பாராட்டிக் கொண்டனர். ஆனால், நோக்கியா தொழிலாளர்கள் தங்களது வேலைக்கும் வாழ்க் கைக்கும் உத்தரவாதம் கோரி நடுத்தெருவில் நின்றபோது, இந்த இருவரில் ஒருவர்கூட அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

நோக்கியா தனது தொழிலாளர்களின் கழுத்தில் கத்தியை வைப்பதற்கு ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே தயாராகிவிட்டது. அமெரிக்காவின் மைக்ரோசாப்ட் நிறுவனம் நோக்கியாவை கடந்த செப்.2013-இல் கையகப்படுத்தியது. இதனையடுத்து நோக்கியா இந்தியாவிலுள்ள தனது ஆலைகள் மற்றும் சொத்துக்களை மைக்ரோசாப்டுக்கு மாற்றிக் கொடுக்க முனைந்திருந்த நேரத்தில் தான், அந்நிறுவனம் இந்திய அரசிற்குச் செலுத்த வேண்டிய பல ஆயிரம் கோடி ரூபாய் வரியைக் கட்டாமல் ஏய்த்திருப்பதைக் கண்டுபிடித்த வருமான வரித்துறை, வட்டியோடு சேர்த்து 21,153 கோடி ரூபாயைச் செலுத்திவிட்டுச் சொத்துக்களை மாற்றிக் கொடுக்குமாறு நோட்டீசு அனுப்பியது. ஏய்த்த வரியைக் கட்ட நோக்கியா மறுக்கவே, அதன் சொத்துக்கள் முடக்கப்பட்டன. இது தொடர்பாக நடந்து வரும் வழக்கில், “வரியைக் கட்டச் சொல்லி நிர்பந்தித்தால், சென்னை ஆலையை மூடிவிட்டு வெளியேறு வோம்” என வாதிட்டுத் தொழிலாளர்களைப் பணயம் வைத்தது, நோக்கியா. இதே சமயத்தில், நோக்கியா தமிழக அரசுக்குச் செலுத்த வேண்டிய 2,400 கோடி ரூபாய் விற்பனை வரியைக் கட்டாமல் தகிடுதத்தம் செய்திருப்பதும் அம்பலமாகி, தமிழக அரசும் வரியைக் கட்ட உத்தரவிட்டு நோட்டீசு அனுப்பியது.

மைக்ரோசாப்டோடு போட்டுக்கொண்ட ஒப்பந்தக் கேடு நெருங்குவதால், ஏய்த்த வரியைக் கட்டாமல் ஆலையை மூடி விட்டு வெளியேறும் குறுக்கு வழியை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டது, நோக்கியா. இதன் முதல்கட்டமாக தனது மாதாந்திர கைபேசி உற்பத்தி இலக்கை 1.3 கோடியிலிருந்து 40 இலட்சமாகத் திட்டமிட்டே குறைத்தது. அதனையடுத்து 6,600 தொழிலாளர்களைச் சிறுகச்சிறுக வெளியேற்றும் முடிவை அறிவித் திருக்கிறது. மேலும், சென்னை ஆலை மூடப்பட்டால் ஏற்படும் உற்பத்தி இழப்பை, சீனாவிலும், வியட்நாமிலும் திறக்கப்பட்டுள்ள புதிய ஆலைகள் ஈடு செய்துவிடும் எனத் தெனாவெட்டாக தெரிவித்திருக்கிறது.


சென்னை - சேப்பாக்கத்தில் நடைபெற்ற நோக்கியா தொழிலாளர்களின் உண்ணாவிரதப் போராட்டம்.

வெறும் 600 கோடி ரூபாய் மூலதனத்துடன் தமிழகத் திற்கு நுழைந்த நோக்கியா அதைவிடப் பலமடங்கு இலாபத்தைச் சட்டபூர்வமாக வும் சட்டவிரோதமாகவும் சம் பாதித்துவிட்டு வெளியேற நாள் குறித்துவிட்டது. ஆனால், எட்டாண்டுகளாகக் கொத் தடிமைகளைவிடக் கேவலமாக அந்நிறுவனத்தில் வேலை பார்த்துவந்த தொழிலாளர் களுக்குக் கிடைத்து என்ன? இருண்ட, நிச்சயமற்ற எதிர் காலம். வளர்ச்சி, வளர்ச்சி என்று ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் ராகம் போடு கிறார்களே, அதன் பொருள் இதுதானோ? ■